Find us on facebook/tamilmirror | Follow us on tamilmirror | epaper/tamilmirror.lk

# தமிழ் Mirror

www.tamilmirror.lk

FRIDAY, MAY 14, 2021

வெள்ளிக்கிழமை மே 14, 2021 | ஒளி: 06 கதிர்: 264 | பக்கம்:08 | நகரப்பதிப்பு | Free




இன்யைதினம் ஈத் பண்டிகையை கொண்டாடும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் எமது இனிய ஈதுல் பிதர் வாழ்த்துகள். (மேலதிக வாழ்த்துச் செய்திகள்: பக்கம் - 07)

## முள்ளிவாய்க்கால் நினைவுச் சின்னம்

# தகர்த்தழிப்பு






■ சண்முகம் தவசீலன்

போரால் உயிரிழந்தவர்களின் நினைவாக முல்லைத்தீவு முள்ளிவாய்க்காலில் நிர்மாணிக்கப்பட்டிருந்த நினைவுச் சின்னம், இரவோடு இரவாக தகர்க்கப்பட்டுள்ளதுடன் நினைவிடத்தில் நடுகை செய்வதற்காக, கொண்டுவரப்பட்ட பொது நினைவுக்கல்லும் மாயமாகியுள்ளது.

இந்த அசம்பாவிதங்கள், நேற்று முன்தினம் (12) இரவு இடம்பெற்றுள்ளன. இதனையடுத்து அப்பகுதியில் நேற்றுக்காலை (13) பதற்றமான சூழல் ஏற்பட்டது.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் முற்றத்தில் புதிதாக நினைவுக் கல்லொன்றை நடுவதற்காக, நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பால், ‘பொது நினைவுக்கல்’ நேற்று முன்தினம் (12) கொண்டுவரப்பட்டு இறக்கிவைக்கப்பட்டது.

நினைவுக்கல் கொண்டுவரப்பட்டதை அடுத்து, அவ்விடத்துக்கு விரைந்த படையினரும் பொலிஸாரும் நினைவேந்தல் பகுதியில் எவ்விதமான பணிகளும் மேற்கொள்ளப்படக்கூடாதென எச்சரித்தனர்.

இதையடுத்து நினைவேந்தல் கட்டமைப்பைச் சேர்ந்தவர்களுக்கும் பொலிஸாருக்கும் இடையில் கடுமையான வாய்த்தர்க்கம் ஏற்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## நினைவேந்தலுக்கு தடையுத்தரவு

■ சண்முகம் தவசீலன்

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் நிகழ்வை நடத்துவதற்கு, முல்லைத்தீவு நீதிமன்றம் தடை உத்தரவை பிறப்பித்துள்ளது.

தொடர்ச்சி P2



## ‘அரசாங்கத்தின் இறுதி ஊர்வலம் ஆரம்பம்’

நினைவுச் சின்னங்களை இடித்து அழிப்பதனூடாக தமிழர்களுடைய உணர்வுகளை அழிக்க முடியாதென தெரிவித்த, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் மட்டக்களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இரா. சாணக்கியன், பொதுத்தேர்தலுக்குப் பின்னர் அரசாங்கம் தனது இறுதி ஊர்வலத்தை நோக்கிப் பயணிக்க ஆரம்பித்துள்ளது என்றார்.

தொடர்ச்சி P2

## ‘ஏப்ரல் 5 ரமழான் வந்திருந்தால் முழு மக்களும் தப்பியிருப்பர்’



### முஜிபுர் தெரிவிப்பு: முடிவுகள் ‘வர்க்க ரீதியிலானது’ என்கிறார்

பிரித்தானிய வைரஸ் குறித்து சுகாதார தரப்பினரால் எச்சரிக்கை விடுக்கப்பட்ட போது, நாட்டை முடக்கமாட்டோமென அறிவித்திருந்தவர்கள், நாட்டை முடக்கிவிட்டனர் எனத் தெரிவித்த ஐக்கிய மக்கள் சக்தியின் பாராளுமன்ற உறுப்பினர் முஜிபுர் ரஹ்மான், அரசாங்கத்தின் முடிவுகள், விஞ்ஞான பூர்வமாக எடுக்கப்படுகின்றனவா அல்லது வர்க்க ரீதியில் எடுக்கப்படுகின்றதா? என வினவினார்.

தொடர்ச்சி P2




## ‘இரவில் தடைவிதித்து நடுகல்லைத் திருடிவிட்டனர்’

■ எம்.றொசாந்த்

“முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எமது மக்கள் இம்முறையும் நினைவுகூர்வார்கள். அதில் விட்டுக்கொடுப்பென்ற பேச்சுக்கே இடமில்லை. நாம் நினைவேந்தலை அமைதியாக முன்னெடுக்கவே விரும்புகின்றோம். ஆனால், தடைகளை விதித்து குழப்பங்களை அரசாங்கம் ஏற்படுத்துகின்றது”

**“ முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை எமது மக்கள் இம்முறையும் நினைவுகூர்வார்கள். அதில் விட்டுக்கொடுப்பென்ற பேச்சுக்கே இடமில்லை. நாம் நினைவேந்தலை அமைதியாக முன்னெடுக்கவே விரும்புகின்றோம்**

என்று, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பு அறிவித்துள்ளது.

தொடர்ச்சி P2

## ‘ஒட்சிசனுக்குத் தட்டுப்பாடு ஏற்பட இடமளியோம்’



கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு, ஒட்சிசனைப் பெற்றுக்கொடுப்பதற்குத் தேவையான சகல உபகரணங்களும், கூடிய விரைவில் வைத்தியசாலைகளுக்குப் பெற்றுக்கொடுக்கப்படும் என்று, சுகாதார அமைச்சர் பவித்ரா வன்னியாராச்சி தெரிவித்தார்.

தீவிர நிலையிலுள்ள கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்காக,

தொடர்ச்சி P2

## ‘சிவப்புப் பட்டியலின் விளிம்பில் இலங்கை’



கொரோனா வைரஸ் தொற்றின் மிக மோசமான கட்டத்தை எட்டிய நாடாக, இலங்கை ‘சிவப்புப் பட்டியலில்’ சேர்க்கப்படும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகத் தெரிவித்த அரச தாதியர் சங்கத்தின் தலைவர் சமன் ரத்னபிரிய, அடுத்த வாரத்துக்குள் அப்பட்டியலுக்குள் இணைக்கப்படலாம் என எச்சரித்தார்.

இதனால், நாட்டிலிருக்கும் வெளிநாட்டு வர்த்தகர்கள், புகழ்பெற்ற வர்த்தகர்கள், இரட்டை குடியுரிமை

தொடர்ச்சி P2



## விமானப்படையின் ஒட்சிசன் சிகிச்சைப் பிரிவு கையளிப்பு

சுவாசக் கோளாறு உள்ள நோயாளிகளின் பயன்பாட்டுக்காக இலங்கை விமானப்படையால் தயாரிக்கப்பட்ட வெப்ப ஈரப்பதமூட்டப்பட்ட ஒட்சிசன் சிகிச்சை பிரிவு (HEATED HUMIDIFIED OXYGEN THERAPY) ஜனாதிபதி அலுவலகத்தில், ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷவிடம் உத்தியோகபூர்வமாக கையளிக்கப்பட்டது.

ஜனாதிபதியின் அறிவுறுத்தலின் பேரில், புத்தாக்கத் துறையில் சர்வதேச தூதுவரான வித்யாஜோதி, கலாநிதி பந்துல விஜேவின் எண்ணக்கருவில் பேராசிரியர் ரணில் டி சில்வா, வைத்தியர் திலங்க ரத்னபால உள்ளிட்ட முன்னணி மருத்துவ நிபுணர்கள் குழுவின் பங்களிப்புடன் இந்த உபகரணத் தொகுதி தயாரிக்கப்பட்டுள்ளது.

தொடர்ச்சி P2

## ‘சட்ட விரோத கொலைகளுக்கு இடமளிக்க முடியாது’



“குற்றவாளிகளுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்படுவது அவசியம். ஆனால், சட்டத்துக்குப் புறம்பாக முன்னெடுக்கும் சட்ட விரோத கொலைகளை உடனடியாக நிறுத்த வேண்டும்” எனத் தெரிவித்த எதிர்க்கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ, அரசாங்கம் சர்வாதிகாரப் போக்கை நோக்கி நகர்வதாகவும் அதற்கெதிராக ஒன்றிணையுமாறும் அழைப்பு விடுத்துள்ளார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

தொடர்ச்சி P2

## 77 மணிநேரம் கடுமையானது



எதிர்வரும் திங்கட்கிழமை (17) அதிகாலை 4 மணிவரை அமுலில் இருக்கும் முழுநாட்டுக்குமான பயணத்தடை, கடுமையானதாக இருக்குமெனத் தெரிவித்துள்ள பொலிஸ் ஊடகப் பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன, அத்தியாவசிய தேவைகளின்றி, வெளியில் நடமாடமுடியாது என்றார்.

தொடர்ச்சி P2

## ‘3 நாள் பயணக்கட்டுப்பாடு சட்டத்துக்கு புறம்பானது’



ஊரடங்கு உத்தரவைப் பிறப்பிக்காமல், மூன்று நாள்களுக்குப் பயணக் கட்டுப்பாடுகளை விதிப்பது சட்டத்துக்கு புறம்பான செயற்பாடாகுமெனத் தெரிவித்துள்ள ஐக்கிய தேசிய கட்சியின் தவிசாளர் வஜிர அபேவர்தன, சட்டத்துக்கு புறம்பாக

தொடர்ச்சி P2

## ‘ஊறு ஜுவா’வை திட்டமிட்டே கொன்றுள்ளனர்



‘ஊறு ஜுவா’ எனப்படும் மாபுலகே தினித் மிலானின் கொலையானது, திட்டமிடப்பட்ட ஒன்றெனத் தெரிவித்த சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பின் உறுப்பினர் நந்திமல் டீ சில்வா, குற்றவாளியாகவே இருந்தாலும் இவ்வாறான கொலைகளுக்கு இடமளிக்கக்கூடாது. எதிர்காலத்திலேனும் விழிப்பாக இருப்போம் என்றார். இம்மாதம் 10ஆம் திகதியன்று பிணையில் விடுவிக்கப்பட்ட ‘ஊறு ஜுவா’, மறுநாள் 11ஆம் திகதியன்று, தெடிகமுவ வந்துராமுல்ல எனுமிடத்தில் வைத்து பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி உயிரிழந்தார்.

தொடர்ச்சி P2

## ‘எம்மீது குறை கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது’



“சுகாதார பாதுகாப்பு கட்டுப்பாடுகள், புதுவருட காலத்தில் தளர்த்தப்பட்டமையே புதுவருட கொரோனா கொத்தணி பரவலுக்கு மூல காரணமென அரசாங்கத்துக்கு எதிராக கைநீட்டுவதை ஏற்றுக்கொள்ள முடியாது” எனத் தெரிவித்த தொலைநோக்கு கல்வி அபிவிருத்தி இராஜாங்க அமைச்சர் சுசில் பிரேமஜயந்த,

தொடர்ச்சி P2

PAGE 1 தொடர்ச்சிகள்

## நினைவேந்தலுக்கு தடையுத்தரவு

கொரோனா வைரஸ் தொற்று நிலைமையைக் கருத்திற்கொண்டு, எதிர்வரும் 16 ஆம் திகதி முதல் 22 ஆம் திகதி வரை முள்ளிவாய்க்கால் பகுதியில் எந்த நிகழ்வும் நடத்தகூடாது, மக்கள் ஒன்றுக் கூடக்கூடாது, பொது இடத்தில் நினைவுகூர கூடாதென தடையுத்தரவில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

முல்லைத்தீவு பொலிஸ் பிரிவைச் சேர்ந்த து.ரவிகரன், ம.ஈஸ்வரி, பீற்றர் இளஞ்செழியன், க.விஜிந்தன், ச.விமலேஸ்வரன் ஆகியோரின் பெயர் குறிப்பிட்டே இந்தத் தடை உத்தரவை முல்லைத்தீவு பொலிஸார் பெற்றுக்கொண்டுள்ளனர். அந்த உத்தரவு, உரியவர்களிடம் கையளிக்கப்பட்டுள்ளது என்றும் பொலிஸார் தெரிவித்தனர்.

## 'அரசாங்கத்தின் இறுதி ஊர்வலம் ஆரம்பம்'

“தமிழர்களுடைய வரலாறுகளை, தமிழர்களுக்கு நினைவு கூரும் வாய்ப்பை கூட இல்லாமலாக்கும் ஓர் அரசாங்கம். ‘தமிழர்களுடைய உணர்வுகளை நீங்கள் இவ்வாறான நினைவு சின்னங்களை இடித்து அழிக்க முடியாது. நீங்கள் இடிக்கும் ஒவ்வொரு நினைவுச் சின்னமும் தமிழர்களுடைய மனங்களில் ஒரு புதிய உணர்வை ஏற்படுத்தும் ஒரு சம்பவமாகத்தான் நான் பார்க்கின்றேன்” எனவும் தெரிவித்துள்ளார்.

முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி சேதப்படுத்தப்பட்டுள்ள சம்பவம் தொடர்பில் சாணக்கியன் வெளியிட்டுள்ள கண்டன அறிக்கையிலேயே மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

அரசாங்கம் எவ்வாறுதான் தமிழ் மக்களின் உணர்வுகளை தடுக்க முயற்சித்தாலும், நடந்த எந்த விடயங்களையும் மறக்க மாட்டோமெனவும், தமிழர்களுக்கு எதிராக நடைபெற்ற எந்த அநீதியையும் தமிழ் மக்கள் மறக்கப்போவதில்லை எனவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

“2009 ஆம் ஆண்டு, இதேவாரத்தில் எத்தனையோ ஆயிரக்கணக்கான உறவுகளை நாங்கள் இழந்திருந்தோம். அந்த உறவுகள் உயிரிழந்த திகதியோ, உயிரிழந்த இடமோ தெரியாத நிலையிலே கூட அனைவரையும் நினைவு கூர்கின்ற ஓரிடமாக அந்த நினைவுச் சின்னத்தை, தமிழர்கள் கடந்த வருடங்களில் பயன்படுத்தியிருந்தனர்” என்றும் தெரிவித்துள்ளார்.

## 'ஏப்ரல் 5 ரமழான் வந்திருந்தால் முழு மக்களும் தப்பியிருப்பர்'

அரசாங்கத்தின் அரசியல் ஒழுங்குப்பத்திரத்திம் மற்றும் அவர்களின் வர்க்கரீதியான மனநிலையிலா, முடிவுகள் எடுக்கப்படுகின்றன என வினவிய அவர், ரமழான் பண்டிகை கொண்டாடப்படும் நாளன்றே பயணத்தடை விதிக்கப்பட்டுள்ளது என்றார்.

எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகத்தில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“முடக்கத்துக்குச் செல்லாமல் நாணயத்தாள்களை அச்சடித்து 5,000 ரூபாய் வழங்கி வீட்டிலிருப்பவர்களையும் வெளியே அனுப்பியது. மாத்திரமின்றி அவர்கள் பின்பற்ற வேண்டிய சுகாதார வழிகாட்டல் பற்றி ஆலோசனைகள் வழங்கவில்லை. மக்களுக்கு தேவையான முறையில் நடந்துகொள்ளலாம் என்ற மனநிலையை ஏற்படுத்தியதால்தான், கொரோனா தொற்று வியாபித்துள்ளது” என்றார்.

எமது, ரமழான் பண்டிகை ஏப்ரல் 5ஆஅம் திகதி வந்திருக்குமாயின், இந்த நாட்டில் உள்ள அனைவரையும் எம்மால் பாதுகாத்திருக்கலாம். அன்றையதினம், எமது பண்டிகை இருந்திருந்தால், தனிமைப்படுத்தல் சட்டத்தை கட்டாயமாக அப்போது,போட்டு இலங்கையை முடக்கி, மக்களையும் வீட்டுக்குள்ளே முடக்கியிருக்கும் என்றார்.

“வர்க்கவாத மனநிலை இருந்து கொண்டு எடுக்கப்படும் இவ்வாறான தீர்மானங்களால், அரசாங்கத்தின் மீது மக்கள் நம்பிக்கை இழந்துள்ளனர். கடந்த ஆண்டும் கொரோனா ஜனாஸாக்களை அடக்கம் செய்வதா, தகனம் செய்வதா என்ற பிரச்சினை வரும் போது இவ்வாறான தீர்மானங்களை தான் அரசாங்கம் எடுத்தது” என்றார்.

# தகர்த்தழிப்பு

போரில் உயிரிழந்த உறவுகளை நினைவுக்கொள்ள உரிமை உண்டென, பொதுக்கட்டமைப்பைச் சேர்ந்தவர்கள், தங்களது நிலைப்பாட்டை பொலிஸாருக்கு எடுத்துரைத்துள்ளனர். இதனையடுத்து, முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பகுதி பொலிஸாரின் பாதுகாப்புக்குள் நேற்று முன்தினம்(12) இரவு முதல் கொண்டுவரப்பட்டுள்ளதுடன் படையிரின் பாதுகாப்பும் குறித்த பகுதிகளில் பலப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையிலேயே புதிதாகக்கொண்டு வரப்பட்ட நினைவுக்கல், மாயமாகியுள்ளது. முள்ளிவாய்க்கால் பகுதியில் ஏற்கெனவே அமைக்கப்பட்டு இருந்த நினைவுச் சின்னமும் உடைத்து சேதப்படுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில் நேற்று (13) காலை நிலைமைகளை பார்வையிட்ட முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் பொதுக்கட்டமைப்பைச் சேர்ந்தவர்கள், மதகுருமார்கள், பாராளுமன்ற உறுப்பினர்களான செல்வம் அடைக்கலநாதன், செல்வராசா கஜேந்திரன், தமிழ் தேசிய மக்கள் முன்னணியின் சட்டத்தரணிகள், கரைதுறைப்பற்று பிரதேச சபை தவிசாளர் உள்ளிட்டவர்கள் முல்லைத்தீவு பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்துள்ளனர்.

அப்பகுதியில் இருக்கும் படையினரே, நினைவுச் சின்னத்தை சேதமாக்கிவிட்டனர் என குற்றஞ்சாட்டப்பட்டது. எனினும், கடந்த 12 வருடங்களாக அந்த நினைவுச்சின்னம் அங்கிருக்கிறது. அப்போதெல்லாம் எவ்விதமான சேதங்களையும் விளைவிக்கவில்லை என படைத்தரப்பினர் விளக்கமளித்துள்ளனர்.

## 'சிவப்புப் பட்டியலின் விளிம்பில் இலங்கை'

**வைரஸ் தொற்றிலிருந்து நாட்டைப் பாதுகாக்க முடியாத அரசாங்கம், கறுப்பு பூஞ்சை தொற்றிலிருந்து மக்களை எவ்வாறு பாதுகாக்கப் போகிறது**

உடையவர்கள் என அனைவரும் நாட்டைவிட்டு வெளியேறுவதற்கு ஆரம்பித்துள்ளனர் என்றுத் தெரிவித்த அவர், அதனை விமான நிலையத்தின் குடிவரவு, குடியகல்வு தகவல்கள் உறுதிபடுத்துகின்றன என்றார்.

நாட்டில் தற்போது கொரோனா வைரஸ் பரவல் நிலைமை மோசமான கட்டத்தை எட்டியுள்ள நிலையில், மற்றுமொரு ஆபத்தை இலங்கை எதிர்கொள்ளவுள்ளதாகவும் கறுப்பு பூஞ்சை (Black fungus) தொற்று இந்தியாவிலிருந்து இலங்கைக்குள் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

நாடு முழுவதும் பரவியுள்ள கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து நாட்டைப் பாதுகாக்க முடியாத ராஜபக்ஷர்கள் அரசாங்கம், கறுப்பு பூஞ்சை தொற்றிலிருந்து மக்களை எவ்வாறு பாதுகாக்கப் போகிறது என வினவினார்.

## 'சட்டவிரோத கொலைகளுக்கு இடமளிக்கமுடியாது'

**மனித உரிமைகள் குறித்து உலகம், நம் நாட்டுக்கு சவால் விடும் ஒரு நேரத்தில், நம் நாட்டைப் பாதுகாப்பது, மக்களைப் பாதுகாப்பது மற்றும் மனித உரிமைகளை வலுப்படுத்துவது எப்படி என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். மீறக்கூடாது**

“சந்தேகநபர்கள், பொலிஸாரால் படுகொலை செய்யப்படும் போது, அரசாங்கம் சட்டவிரோத ஆட்சியில் ஈடுபடும் பாசிஸ அரசாங்கமாக மாறி வருகிறது. இதுபோன்ற கொலைகள் மூலம் சந்தேகநபருடன் கொடுக்கல் வாங்கலில் ஈடுபட்ட அரசியல்வாதிகள் மற்றும் மேல்நிலை வர்த்தகர்கள் சட்டத்திலிருந்து நழுவி விடுகின்றனர். இவையெல்லாம் சட்டத்தின் ஆட்சி மற்றும் சட்ட ஆட்சியை அமுலாக்கும் நிறுவனங்களின் மீதான நம்பிக்கையையும் இழக்கச் செய்யும்” என்றார்.

“நாட்டின் பாதுகாப்பையும் சட்டத்தையும் பலப்படுத்த வேண்டும். நீதியை நிர்வகிக்கும் செயல்முறையை நாம் பாதுகாக்க வேண்டும். சட்டத்தின் ஆட்சியை பாதுகாக்க வேண்டும். கொலைகாரர்கள், போதைப் பழக்கத்திற்கு அடிமையானவர்கள் மற்றும் சிறுவர் துன்புறுத்துபவர்களிடமிருந்து விடுபட்ட நாகரிக சமுதாயமாக நம் நாடு இருக்க வேண்டும் என்பதை நாங்கள் அனைவரும் ஒப்புக்கொள்கிறோம்” என்றார்.

“இதுபோன்ற குற்றங்களைச் செய்யும் அனைவரையும் கடுமையாக தண்டிப்பது எங்கள் கொள்கையாகும்” எனத் தெரிவித்த அவர், “ஆனால், ஒரு நீதித்துறை செயல்முறை செயல்படுகிறது. நாம் சட்டத்தின் ஆட்சியை நிலைநிறுத்த வேண்டும். நீதி செயல்முறையை நாம் பாதுகாக்க வேண்டும்” என்றார்.

“பாசிசத்தை செயல்படுத்த நாம் அனுமதிக்க முடியாது. நம் நாட்டில் சர்வாதிகார அரசாங்கம் இருக்கக்கூடாது. இந்த கொலை அலைகளின் மூலம் மக்களின் உரிமைகள் இழக்கப்பட்டுள்ளன. மீறப்பட்டுள்ளன. மனித உரிமைகள் குறித்து உலகம், நம் நாட்டுக்கு சவால் விடும் ஒரு நேரத்தில், நம் நாட்டைப் பாதுகாப்பது, மக்களைப் பாதுகாப்பது மற்றும் மனித உரிமைகளை வலுப்படுத்துவது எப்படி என்பதை நாம் அறிந்து கொள்ள வேண்டும். மீறக்கூடாது” என்றார்.

## 'இரவில் தடைவிதித்து நடுகல்லை திருடிவிட்டனர்'

யாழ்.ஊடக அமையத்தில் நேற்று(13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே, மேற்படி அமைப்பின் உறுப்பினர்கள் இவ்வாறு தெரிவித்தனர்.

இதன்போது தொடர்ந்துரைத்த அவர்கள், “மக்களை இரவில் நடமாட தடைவிதித்துவிட்டு, இரவோடு இரவாக முள்ளிவாய்க்காலில் உள்ள நினைவுத் தூபியை அடித்து சேதப்படுத்தியுள்ளனர். நடுகல்லை களவாடி எடுத்துச் சென்றுள்ளனர். நடுகல், களவாடப்பட்டமைக்கு படையினரும் அங்கு நின்றிருந்த பொலிஸாருமே பதிலளிக்க வேண்டும்.

“அவர்களுக்கு எதிராக முள்ளிவாய்க்கால் நினைவேந்தலுக்கான வடக்கு, கிழக்கு பொது கட்டமைப்பு, நிச்சயமாக சட்டநடவடிக்கைகளை எடுக்கும்” என்றார்.

“ஈஸ்டர் தாக்குதலில் கொல்லப்பட்டவர்களை நினைவுகூர, நினைவுதூபி அமைக்க அனுமதித்துள்ள இலங்கை அரசாங்கம், மறுபுறம் இன அழிப்புக்குள்ளான எமது மக்களை நினைவுகூர அனுமதி மறுக்கின்றது. நினைவு தூபிகளை அடித்து நொருக்குகின்றது” என அவ்வமைப்பு குற்றஞ்சாட்டியுள்ளது.

## 'ஒட்சிசனுக்கு தட்டுப்பாடு ஏற்பட இடமளியோம்'

**பாரியளவிலான திரவ ஒட்சிசன் தாங்கிகள், ஒட்சிசன் செறிவு ஆலைகள், கட்டில்களுக்கு அருகில் சிறியளவிலான ஒட்சிசன் செறிவூட்டிகள் காணப்படுகின்றன**

ஹைப்லோ என்ற ஒட்சிசன் இயந்திரம் பயன்படுத்தப்படுவதாகவும் கைவசம் 350 ஹைப்லோ இயந்திரங்கள் உள்ள நிலையில் மேலும் 350 ஹைப்லோ இயந்திரங்களைப் பெற்றுக்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

தான் கொரோனா வைரஸ் தொற்றுக்குள்ளானபோது, தனது உயிரை மீட்பதற்கு ஹைப்லோ இயந்திரமே பேருதவியதாக அமைந்ததாகவும் எனவே இந்த இயந்திரத்தை ஏனையத் தொற்றாளர்களுக்கும் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்கப்படும் என்றும் தெரிவித்தார். நாட்டில் ஒட்சிசனை உற்பத்தி செய்யும் நிறுவனங்கள், போதுமானளவு ஒட்சிசனை உற்பத்தி செய்து வருகின்றன என்றும் சில வைத்தியசாலைகளில் பாரியளவிலான திரவ ஒட்சிசன் தாங்கிகள், ஒட்சிசன் செறிவு ஆலைகள், கட்டில்களுக்கு அருகில் சிறியளவிலான ஒட்சிசன் செறிவூட்டிகள் என்பன போதுமானளவு காணப்படுவதாகவும் அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இதற்கும் மேலதிகமாக 21,000 ஒட்சிசன் சிலிண்டர்களை இறக்குமதி செய்து களஞ்சியப்படுத்துமாறு, அரசாங்கத்துக்குச் சொந்தமான நிறுவனமான லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனத்துக்கு, பணிக்குழு அறிவுறுத்தியுள்ளது.

இந்நிலையில் லிட்ரோ கேஸ் லங்கா நிறுவனம், சிங்கப்பூரிலிருந்து ஒட்சிசன் சிலிண்டர்களை இறக்குமதி செய்வதற்குத் தேவையான நடவடிக்கைகளை எடுத்துள்ளதுடன் அவற்றில் முதல் தொகுதி விரைவில் இறக்குமதி செய்யப்படும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

## 77 மணிநேரம் கடுமையானது

பேச்சாளர் பிரதிப் பொலிஸ் மா அதிபர் அஜித் ரோஹன, அத்தியாவசிய தேவைகளின்றி, வெளியில் நடமாடமுடியாது என்றார்.

தனிமைப்படுத்தல் அல்லது பயண விதிகளை மீறும் நபர்களுக்கு எதிராக கடுமையான சட்ட நடவடிக்கை எடுக்கப்படும் எனத் தெரிவித்த அவர், நடைமுறையில் இருக்கும் சட்டத்தின் பிரகாரம், மீறுவோருக்கு எதிராக, 6 வருடங்கள் தொடர் சிறைத்தண்டனை விதிக்கப்படும் அல்லது 10ஆயிரம் ரூபாய் தண்டம் இன்றேல், இரண்டும் ஒரேதடவையில் விதிக்கப்படலாம் என்றார்.

13ஆம் திகதி இரவு 11 மணிக்கு ஆரம்பமாகி, மூன்று தினங்களுக்கு அமுலில் இருக்கும் இந்த பயணத்தடையின் போது, தேசிய அடையாள அட்டையைக் காணப்பித்து பயணங்களை மேற்கொள்வதற்கு அனுமதியளிக்கப்படாது என்றார்.

“சகல வியாபார நிலையங்களும் மூடப்பட்டிருக்கும்: மருந்தகங்களைத் திறப்பதற்கு மட்டுமே அனுமதி வழங்கப்பட்டுள்ளது” என்றார்.

அத்தியாவசியத் தேவைகளுக்கு மட்டுமே வீட்டிலிருந்து வெளியேற முடியும் என்றுத் தெரிவித்த அவர், வைத்தியசாலைகள் மற்றும் மருந்துகளை வாங்க செல்வதற்காக மட்டுமே பொதுமக்கள் அனுமதிக்கப்படுவர் என்றும் தெரிவித்தார்.

மூன்று தினங்கள் முடிவடைந்ததன் பின்னர், திங்கட்கிழமை (17) காலை முதல் தேசிய அடையாள அட்டை முறைப்படி, வீட்டிலிருந்து ஒருவர் வெளியேறலாம் என்றார்.

## “ஊறு ஜுவா”வை திட்டமிட்டே கொன்றுள்ளனர்

இந்நிலையில், கொழும்பில் நேற்று (13) நடத்திய ஊடகவியலாளர் சந்திப்பிலேயே இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பிலேயே உறுப்பினர் நந்திமல் டீ சில்வா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

பிணை கிடைத்ததன் பின்னர், அதுதொடர்பில், தனது வீட்டாருக்கு அவரே, தொலைபேசி மூலம் அழைத்து தன்னை 12.30 மணியளவில் அழைத்துச் செல்லுங்கள் எனக் கேட்டுக்கொண்டுள்ளார்.

எனினும், தனது கிடைக்க வேண்டிய சிறிதளவு பணத்துக்காக அவர், காத்திருந்துள்ளார். இந்நிலையில், பிணை கிடைத்திருக்கும் எவரும் உள்ளே இருக்க முடியாதென தெரிவித்த அதிகாரிகள், சிறையிலிருந்து அவரை வெளியே அனுப்பிவிட்டுள்ளனர்.

காலில் செருப்பு கூட இல்லாமல் “ஊறு ஜுவா“ வெளியேறிய வேளையில், அவ்விடத்துக்கு வந்த வெள்ளை வானொன்று அவரை கடத்திச் சென்றுள்ளதாக அவரது வீட்டார் தெரிவிக்கின்றனர்.

எங்கே? இருக்கிறார் என்று தெரியாமல் அவரது வீட்டார் எல்லா இடமும் தேடி அலைந்தபோது கடந்த 11ஆம் திகதி தான் நவகமுவ பொலிஸ் நிலையத்தில் தடுத்து வைக்கப்பட்டுள்ளதாகவும் தனக்கு உண்பதற்கு ஏதாவது கொண்டு வருமாறு தெரிவித்து அவர் தனது வீட்டாருக்கு தொலைபேசி மூலம்தகவல் வழங்கியுள்ளார்.வீட்டாருக்கு அந்த நேரத்தில் பொலிஸ் நிலையத்துக்கு வரமுடியாமல் போயுள்ளது.

பிறகு அன்று காலை 8.30 மணியளவில் ஊறு ஜுவா மீண்டும் தனது சகோதரருக்கு அழைப்பை ஏற்படுத்தி தன்னை எங்கோ அழைத்துச் செல்வதாகவும் பயமாகவுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

வீட்டார் 8.45 மணியளவில் சட்டத்தரணியுடன் நவகமுவ பொலிஸுக்கு போகும் போது,ஊறு ஜுவா அங்கே இல்லை.அப்போது குறித்த சட்டத்தரணி நவகமுவ பொலிஸ் நிலையத்தின் பொறுப்பதிகாரியிடம் வினவியபோது விசாரணைக்காக அழைத்துச் செல்வதாகத் தெரிவித்துள்ளார்.

பின்னர் 9.30-9.45 க்கு இடையில், தப்பிச் செல்ல முற்பட்டாரென தெரிவித்து, சுட்டுக்கொலை செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் இது குறித்து பொலிஸ் நிழலய பொறுப்பதிகாரியிடம் சிறைக்கைதிகளின் உரிமைகளைப் பாதுகாக்கும் அமைப்பு சார்பில் உங்கள் பொறுப்பின் கீழ் இருந்த ஒருவர் எவ்வாறு கொல்லப்பட்டாரென, வினவியபோது அவர் ஏதேதோ கூறி மழுப்பி அழைப்பை துண்டித்துவிட்டார் என்றார்.

ஊறு ஜுவாவின் வீட்டுக்குச் சென்றுள்ள பொலிஸார், கொரோனா தொற்றியுள்ளதாகத் தெரிவித்து, சடலத்தை எரிக்குமாறு பணித்துள்ளனர். இதுதொடர்பில் நீதிமன்றத்துக்கு சென்று பொலிஸாரின் இந்த நடவடிக்கையை தடுக்க நடவடிக்கை எடுப்போம். சிறையில் இருந்து வெளியே வரும் மனிதனுக்கு பாதுகாப்பு இல்லையென்பதுடன், அரச பயங்கரவாதமா தற்போது செயற்படுத்தப்படுகின்றது என்ற சந்தேகம் ஏற்பட்டுள்ளது என்றார்.

இதேவேளை ஊரு ஜுவா மற்றும் கொஸ்கொட தாரக்க ஆகிய குற்றவாளிகள் கொல்லப்பட்டுள்ள சம்பவத்தை இலங்கை சட்டத்தரணிகள் சங்கத்தின் நிறைவேற்று குழு வன்மையாகக் கண்டிப்பதாகத் தெரிவித்து, இலங்கை சட்டத்தரணிகள் சங்கம் ஊடக அறிக்கையொன்றை வெளியிட்டுள்ளது.

## 'எம்மீது குறை கூறுவதை ஏற்றுக்கொள்ள முடியாது'

கொரோனா தொற்றொழிப்பில், இலங்கை சிறந்த இடத்தை பிடித்திருந்தது என்றார்.

ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுன அலுவலகத்தில் நேற்று (13) இடம்பெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு கருத்துரைத்த போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

“கொரோனாவை கட்டுப்படுத்த, அரசாங்கம் ஆரம்ப காலத்தில் இருந்து பொறுப்புடன் செயற்பட்டுள்ளது. கொவிட் முதலாம் சுற்றுத் தாக்கம் சிறந்த முறையில் கட்டுப்படுத்தப்பட்ட பின்னணியில் பொதுத்தேர்தல் நடத்தப்பட்டது” என்றார்.

“இரண்டாம் சுற்றுத் தாக்கமும் சிறந்த முறையில் கட்டுப்படுத்தப்பட்டது. இவ்வாறான பின்னணியில் கொவிட் தாக்கத்தை சிறந்த முறையில் கட்டுப்படுத்திய நாடுகளின் பட்டியலில் இலங்கை 10 ஆவது இடத்தை பிடித்தது” எனத் தெரிவித்த அவர், “பலம் வாய்ந்த நாடுகளால்கூட கொவிட் தாக்கத்தை கட்டுப்படுத்த முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. எனவே, பொதுமக்களும் பொறுப்புடன் செயற்பட வேண்டும்” என்றார்.

“புதுவருட கொவிட் கொத்தணி தாக்கத்தை கட்டுப்படுத்த அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது. கொவிட் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் தற்போது துரிதகரமாக முன்னெடுக்கப்படுகின்றன” என்றார்.


“மேல் மாகாணத்தில் கொவிட் வைரஸ் தொற்றாளர்கள் அதிகளவில் அடையாளம் காணப்பட்டுள்ளார்கள். மேல் மாகாணத்தில் 30 வயதுக்கு மேற்பட்ட அனைவருக்கும் தடுப்பூசி செலுத்தும் நடவடிக்கைகள் எதிர்வரும் வாரம் முதல் முன்னெடுக்கப்படும். இதற்கமைய சீனாவில் இருந்து சினோர்பாம் தடுப்பூசிகளை மேலதிகமாக பெற்றுக் கொள்ள அரசாங்கம் உரிய நடவடிக்கைகளை முன்னெடுத்துள்ளது” என்றார்.

## '3 நாள் பயணக்கட்டுப்பாடு, சட்டத்துக்குப் புறம்பானது'

விதிக்கப்பட்டுள்ள இப்பயண கட்டுப்பாட்டை சவாலுக்கு உட்படுத்தி, அடிப்படை உரிமை மனுவைத் தாக்கல் செய்தால், விதிக்கப்பட்டுள்ள சகல பயணக்கட்டுபாட்டுகளையும் அரசாங்கம் மீளப்பெறவேண்டிய நிலைமை ஏற்படும் என்றார்.

“1947இல் நிறைவேற்றப்பட்ட பொதுமக்கள் பாதுகாப்பு கட்டளைச் சட்டத்தின் கீழ் விதிக்கப்படும் ஊரடங்கு உத்தரவால் மாத்திரமே பொதுமக்களின் பயணக்கட்டுபாடுகளை கட்டுப்படுத்தலாம்” என்றார்.

எனினும், 1932ஆம் ஆண்டு, இங்கிலாந்தில் நிறைவேற்றப்பட்ட இராசதானிகள் பாதுகாப்பு சட்டத்தின் கீழான ஏற்பாடுகளுக்கு அமையவே, சுகாதார சேவை பணிப்பாளர் நாயகத்தால் பயணக்கட்டுபாடுகள் விதிக்கப்பட்டுள்ளன என்றும் தெரிவித்துள்ளார்.



# கொரோனா செய்தித்துளிகள்

- மே முதல் இனங்காணப்படும் கொரோானா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை 25 ஆயிரத்தைக் கடந்துள்ளது.
- வவுனியா மாவட்ட வைத்தியசாலையின் வைத்தியர்கள் இருவருக்குக் கொரோனா வைரஸ் தொற்று உறுதி.
- தம்புள்ள, இனாமலுவ பிரதேசத்தில் உள்ள தனியார் ஆடைத் தொழிற்சாலையை தற்காலிகமாக மூடி, அதன் ஊழியர்கள் அனைவருக்கும் பி.சி.ஆர் பரிசோதனைகளை மேற்கொள்ள அறிவுறுத்தப்பட்டுள்ளது.
- பதிவு செய்யப்பட்டுள்ள முன்பள்ளி ஆசிரியர்களுக்கான மாதாந்தக் கொடுப்பனவை உரிய முறையில் வழங்குவதற்கு அனுமதியளிக்கப்பட்டுள்ளது..
- கொரோனா வைரஸ் தடுப்பூசிகளை செலுத்தும் வேலைத்திட்டத்தின் கீழ், நேற்று முன்தினம் (12) மாத்திரம் நாட்டில் 80 ஆயிரத்து 277 பேருக்குத் கொரோனா தடுப்பூசிகள் செலுத்தப்பட்டதாக இராஜாங்க அமைச்சர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.
- மூன்று மாவட்டங்களைச் சேர்ந்த 11 கிராம சேவகர் பிரிவுகள் முடக்கப்பட்டுள்ளன.
- கொரோனா வைரஸ் நிலைமைகளால் சப்ரகமுவ மாகாணத்தில், வாகனங்களுக்கான அனுமதிப் பத்திரங்களை விநியோகிக்கும் பணிகள் நேற்று முதல் இம்மாதம் 31ஆம் திகதி வரையில் தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டுள்ளன.
- காலி, அஹங்கமவில் வீட்டில் உயிரிழந்த 75 வயது பெண்ணுக்கு கொரோனா தொற்று உறுதி.
- தனிமைப்படுத்தல் சட்டங்களை மீறிய மேலும் 448 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

இந்தியக் கொரோனா வைரஸ்

# இலங்கைக்குள் எப்படி வந்தது?

எதிர்வரும் நாள்களில் நாட்டில் அதிகளவான கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் இனங்காணப்படலாமென எச்சரிக்கும் தொற்று நோய் பிரிவின் சிரேஷ்ட வைத்திய நிபுணர் சுதத் சமரவீர, இந்தியாவிலிருந்து வந்தவர்களின் ஊடாகவே, நாட்டில் இந்திய வைரஸ் பரவி வருவதாகக் கண்டறியப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.



இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், நாட்டில் நாளாந்தம் இனங்காணப்படும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது. நாளொன்றுக்கு இனங்காணப்படும் தொற்றாளர்களின் எண்ணிக்கை 2 ஆயிரத்து 500 தாண்டியுள்ளது. எதிர்வரும் நாள்களிலும் இதேபோல தொற்றாளர்களின் எண்ணிக்கை மேலும் அதிகரிக்கலாமென எதிர்பார்க்கப்படுவதாகவும் கூறினார்.

இதேவேளை, பிரித்தானியாவில் இருந்து வந்த ஒருவரின் ஊடாகவே இலங்கையில் பிரத்தானியக் கொரோனா வைரஸ் பரவி இருக்கக்கூடுமெனவும், எனினும் இந்தியாவிலிருந்து நாட்டுக்கு வந்த இந்தியரிடமிருந்தே இந்திய கொரோனா வைரஸ் நாட்டில் பரவிவருவது கண்டறியப்பட்டு உள்ளதாகவும் கூறினார்.

எனவே வெளிநாடுகளில் இருந்து வருவோரை தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தும்போது கடந்த காலங்களைவிட கடும் அவதானத்துடன் செயற்பட வேண்டுமெனவும் வலியுறுத்தியுள்ள அவர், இதனாலேயே 14 நாள்கள் தனிமைப்படுத்தல் மீண்டும் கட்டாயப்படுத்தப்பட்டு உள்ளதாகவும் தெரிவித்தார்.

மூன்று நாள் சபை

# இரண்டு நாள் போர்ட் சிட்டி விவாதம்

பாராளுமன்ற அமர்வுகள் அடுத்த வாரம் 18ஆம் திகதி முதல் 20ஆம் திகதி வரையில் மூன்று நாள்களுக்கு நடத்துவதற்கு சபாநாயகர் மஹிந்த யாப்பா அபேவர்தன தலைமையில் நேற்று (13) கூடிய பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.

கொரோனா வைரஸ் தொடர்பான சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களுக்கு அமைய பாராளுமன்ற அமர்வுகள் முன்னெடுத்துச் செல்லப்படுமென பாராளுமன்ற செயலாளர் நாயகம் தம்மிக்க தஸநாயக்க தெரிவித்துள்ளார்.

மேலும், கொழும்புத் துறைமுக நகர பொருளாதார ஆணைக்குழு சட்டமூலம் 19ஆம், 20ஆம் திகதிகளில் இரு நாள் விவாதத்துக்கு எடுத்துக்கொள்வதற்கும் பாராளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் தீர்மானிக்கப்பட்டுள்ளது.



வாயிலிருந்த பீடியை மறந்து

# முகக் கவசம் அணிந்த முதியவர்

பீடியொன்றை பற்றவைத்தவாறு சைக்கிளில் சென்று கொண்டிருந்த முதியவர் ஒருவர், வீதியில் பொலிஸாரைக் கண்டவுடன், வாயில் வைத்திருந்த பீடியுடன் முகக் கவசத்தை அணிய முற்படுகையில் பொலிஸாரால் தடுக்கப்பட்டுள்ள சம்பவம் நேற்று முன்தினம் (12) கிரிஉல்ல பிரதேசத்தில் இடம்பெற்றுள்ளது.

முகக் கவசங்களை அணியாதவர்களை கைதுசெய்வதற்கான பணியில், கிரிஉல்ல பொலிஸார் ஈடுபட்டுக்கொண்டிருந்த போது, கொழும்பு- குருநாகல் பிரதான வீதியில், நபரொருவர் சைக்கிளை நிறுத்தி, அவசரஅவசரமாக முகக் கவசத்தை அணிவதை பொலிஸார் கண்டுள்ளதுடன், அந்த முகக் கவசம் தீப்பற்றுவதையும் அவதானித்து கூக்குரலிட்டு முகக் கவசம் அணிவதைத் தடுத்துள்ளனர்.

பொலிஸாரைக் கண்ட பதற்றத்தில் வாயில் பீடி இருப்பதை மறந்து தான் முகக் கவசத்தை அணிந்து கொண்டதாகவும் முகக்கவசத்தை அணியாமைக்கு மன்னிப்பும் கோரியுள்ளார் அந்த முதியவர். முதியவரின் இச்செயற்பாட்டை பார்த்து சிரித்த பொலிஸார்,இனிமேல் இவ்வாறு நடந்துக்கொள்ள வேண்டாம் என அறிவுரை வழங்கியுள்ளனர்.

# 'இலவசமாகக் கிடைக்குமென அரசாங்கம் காத்திருக்கிறது'



வைத்தியசாலைகளில் காணப்படும் மருத்துவ உபகரணப் பற்றாக்குறையை நிவர்த்தி செய்வதற்கான பணிகளை ஐக்கிய மக்கள் சக்தி, சுயமாக மேற்கொள்ள உள்ளதாகத் தெரிவிக்கும் முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் விஜேபால ஹெட்டியாராச்சி, மருத்துவ உபகரணங்கள் இலவசமாகக் கிடைக்குமென அரசாங்கம் காத்திருப்பதாகவும் குற்றஞ்சுமத்தினார்.

காலியில் நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்துகொண்டு உரையாற்றும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார். இதன்போது தொடர்ந்து உரையாற்றிய அவர், கொரோனா வைரஸ் முதல் அலையின்போது அவற்றை எதிர்கொள்ள பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தலைமையில் அனைத்துக் கட்சித் தலைவர்கள் கூட்டம் கூட்டப்பட்டது. எனினும் தற்போது அந்த நிலைமை இல்லை. எனவே ஐக்கிய மக்கள் சக்தி இதற்குப் பின்னரும் அரசாங்கத்துடன் தொடர்புகளைப் பேணாதெனவும் தெரிவித்தார்.

நாட்டில் சுகாதாரத்துறை அமைச்சராகப் பலர் இருப்பதாகவும், பவித்ரா, சன்ன ஜயசுமன, சுதர்ஷினி பெர்ணான்டோ புள்ளே, சிசிர ஜயகொடி ஆகியோர் ஒன்றுகூடிக் கலந்துரையாடி, ஒரு தீர்மானத்துக்கு வரமுடியாத நிலையில், எதிர்க்கட்சியுடன் எவ்வாறு இவர்கள் கலந்துரையாடுவார்கள் எனவும் அவர் இதன்போது கேள்வி எழுப்பினார்.

எனவே ஐக்கிய மக்கள் சக்தி, சுயேட்சையாக வைத்தியசாலையில் உள்ள உபகரணப் பற்றாக்குறை உள்ளிட்ட வசதிகளை செய்து கொடுப்பதற்குத் தீர்மானித்து உள்ளதெனவும், அரசாங்கம் இவற்றைச் செய்யும் வரையில் தாம் காத்திருக்கப்போவதில்லை என்றார்.

நாட்டுக்குத் தேவையான மருத்துவ உபகரணங்களை உலக சுகாதார ஸ்தாபனம் அல்லது இந்தியா இலவசமாக வழங்குமென அரசாங்கம் காத்திருப்பதாகவும் கூறிய அவர், தேவையான நேரத்தில் இது தொடர்பில் கலந்துரையாடி அவற்றைப் பெற்றுக்கொள்ள அரசாங்கம் நடவடிக்கை எடுக்கவில்லை எனவும் குற்றஞ்சுமத்தினார்.

'கொஸ்கொட தாரக்க'

# சூட்டுக்கொலை

பாதாள உலகக்கோஷ்டி தலைவராகக் கருதப்படும் 'கொஸ்கொட தாரக்க' என்றழைக்கப்படும் தர்மகீர்த்தி தாரக பெரேரா விஜேசேகர ஹேவத் (வயது 34), பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி, நேற்று (14) அதிகாலை உயிரிழந்துள்ளார் என்று, மீரிகம பொலிஸார் தெரிவித்தனர்.



மீரிகம ரேந்தபொல வல்வத்த பிரதேசத்தில், பொலிஸ் அதிகாரி ஒருவரின் துப்பாக்கியைப் பறிக்க முற்பட்டபோதே, பொலிஸாரின் துப்பாக்கிச் சூட்டுக்கு இலக்காகி அவர் உயிரிழந்துள்ளார் என்று, பொலிஸார் தெரிவித்தனர்.

சந்தேக நபருக்கு எதிராக 07 கொலைக் குற்றச்சாட்டுகள், 23 கொள்ளைகள், துப்பாக்கி வைத்திருந்ததாக 8 குற்றச்சாட்டுகள் பதிவாகியுள்ளன என்று பொலிஸார் தெரிவித்தனர்.

குற்றப்புலனாய்வுப் பிரிவு திணைக்களத்தின் பொறுப்பில் இருந்த சந்தேகநபரான கொஸ்கொட தாரக்க, நேற்று முன்தினம்(12), பேலியாகொட குற்றப்புலனாய்வுப் பிரிவினரிடம் ஒப்படைக்கப்பட்டுள்ளார்.

பேலியாகொட குற்றப்புலனாய்வுப் பிரிவினர் மேற்கொண்ட விசாரணைகளின்போது, கொஸ்கொடை பிரதேசத்திலுள்ள மயான பூமியில், மறைத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் டி56 ரக துப்பாக்கிகள் 04, மெகசின் 4, தோட்டாக்கள் 58 என்பவற்றை குற்றப்புலனாய்வுப் பிரிவினர் கைப்பற்றியுள்ளனர்.

மேலதிக விசாரணைகளில், சந்தேக நபர், மீரிகம ரேந்தபொல வலவத்த பாதையிலுள்ள கட்டடமொன்றில், ஸ்னைப்பர் ரக துப்பாக்கி ஒன்றை மறைத்துவைத்துள்ளார் என்று தெரிந்துகொண்ட அதிகாரிகள் அதனைக் கைப்பற்றுவதற்காக, சந்தேக நபரை அழைத்துக்கொண்டு நேற்று (13) அதிகாலை குறித்த பகுதிக்குச் சென்றுள்ளனர்.

இதன்போது சந்தேக நபர், பிரதான பொலிஸ் பரிசோதகர் ராஜசூரியவிடமிருந்த துப்பாக்கியைப் பறிக்க முயற்சித்துள்ளார் என்றும் இதன்போது துப்பாக்கி வெடித்ததில் பொலிஸ் அதிகாரி காயமடைந்தார் என்றும் இதனையடுத்து பொலிஸார் மேற்கொண்ட துப்பாக்கிப் பிரயோகத்தில், சந்தேக நபர் உயிரிழந்தார் என்றும் தெரிவிக்கப்படுகிறது.

சம்பவத்தில் காயமடைந்த பொலிஸ் அதிகாரி, வத்துபிட்டிவல வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ள நிலையில் அவருக்கு அறுவை சிகிச்சை செய்யப்பட்டுள்ளதாகவும் பொலிஸார் தெரிவித்தனர்.

கொஸ்கொட தாரக்கவின் உடல் பிரேத பரிசோதனைக்காக மீரிகம வைத்தியசாலையின் பிரேத அறையில் வைக்கப்பட்டுள்ளது.

இச்சம்பவம் தொடர்பில், பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

'பல்லேகல ஆயுர்வேத வைத்தியசாலையில்

# தொற்றாளர்களுக்கு சிகிச்சை'

பல்லேகல ஆயுர்வேத வைத்தியசாலையில் தற்போது கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த ஆயுர்வேத வைத்தியசாலைகள் அபிவிருத்தி, சமூக சுகாதார இராஜாங்க அமைச்சர் சிசிர ஜயகொடி, தம்மிக்க பாணியை விற்பனை செய்வதற்கு அனுமதியில்லை எனவும் தெரிவித்தார்.



இது தொடர்பில் மேலும் தெரிவித்துள்ள அவர், பல்லேகல ஆயுர்வேத வைத்தியசாலையில் தற்போது கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் சிகிச்சை பெற்று வருகிறார்கள். அதேபோல நாவின்ன உள்ளிட்ட நாட்டிலுள்ள ஏனைய ஆயுர்வேத வைத்தியசாலைகளையும் கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு முறையாக வழங்கும் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுவதாகவும் கூறினார்.

வத்துபிடிய வைத்தியசாலையின் வைத்தியர்கள் மூவர், அங்கு சிகிச்சை பெற்ற கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு தம்மிக்க பாணியை வழங்கியிருந்தார்கள். இதன் பின்னர் மூன்று நாள்களிலேயே தொற்றாளர்களுக்கு மேற்கொள்ளப்பட்ட பி.சி. ஆர் பரிசோதனையில், தொற்று இல்லை என்பது உறுதி செய்யப்பட்டு நூற்றுக்கு நூறு சதவீதம் குணமடைந்ததாக வைத்தியர்கள் தன்னிடம் அறிக்கையைக் காண்பித்ததாகவும் கூறினார்.

தம்மிக்க பாணியை கடவுளின் சக்தியால் உருவாக்கப்பட்டதாக எந்தவிதமான தகவல்களும் இல்லை எனவும் கூறிய அவர், தம்மிக்க பாணியை விற்பனை செய்வதற்கு அனுமதி வழங்கப்படவில்லை எனவும், இது தொடர்பில் ஆயுர்வேத திணைக்களம் எழுத்துமூலமாக தம்மிக்கவுக்கு அறிவித்துள்ளதோடு, எதிர்காலத்தில் அது தொடர்பில் நடவடிக்கை எடுக்கப்படுமெனவும் கூறினார்.

கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிக்க

# ரூ.11 கோடி செலவில் 750 கட்டில்கள் நிர்மாணம்

கொரோனா வைரஸ் தொற்றாளர்கள் சிகிச்சை பெறும் வைத்தியசாலைகள் மற்றும் தனிமைப்படுத்தல் சிகிச்சை நிலையங்களுக்கு வழங்குவதற்காக, அரச பொறியியலாளர் கூட்டுத்தாபனம், அரச தொழிற்சாலைகள் துறை திணைக்களம் என்பவற்றின் நிதியுதவியில் 11 கோடி ரூபாய் செலவில் 750 கட்டில்களை நிர்மாணிக்கும் பணிகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.




இதற்கமைவாக அரச பொறியியல் கூட்டுத்தாபனம் 250 கட்டில்களையும் அரசாங்க தொழிற்சாலைகள் திணைக்களம் 500 கட்டில்களையும் நிர்மாணிக்கவுள்ளன.

தற்போதைய நிலையில், 160 கட்டில்களின் நிர்மாணிப்புப் பணிகள் நிறைவுபெற்றுள்ளன என்று தெரிவிக்கப்படுகிறது.

அரச பொறியியல் கூட்டுத்தாபனத்தால் நிர்மாணிக்கப்பட்ட 60 கட்டில்கள், அமைச்சர் நாமல் ராஜபக்ஷவிடம் கையளிக்கப்பட்டுள்ளன. இவ்வாறு கையளிக்கப்பட்ட கட்டில்களில் 50 கட்டில்கள் கொஸ்கம வைத்தியசாலைக்கும் 10 கட்டில்கள் பொல்கஸ்ஓவிட்ட வைத்தியசாலைக்கும் கையளிக்கப்பட்டுள்ளன.

# 'அரசாங்கத்தை விமர்சிக்காது ஒத்துழையுங்கள்'

அரசாங்கத்தை விமர்சிக்காது, அரசாங்கத்தால் முன்னெடுக்கப்படும் கொரோனா வைரஸ் ஒழிப்புப் பணிகளுக்கு எதிர்க்கட்சியினர் ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனத் தெரிவிக்கும் அமைச்சர் பிரசன்ன ரணதுங்க, தடுப்பூசிகளைப் பெற்றுக்கொள்ள வரும் பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பு வழிகாட்டல்களைப் பின்பற்ற வேண்டுமென்றார்.



கம்பஹாவில் நேற்று (13) ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும்போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்ததோடு, கொரோனா வைரஸ் தொற்று அனைத்துக் கட்சியினருக்கும் ஏற்படுமென்பதால், அரசாங்கத்தின் கொரோனா ஒழிப்புப் செயற்பாடுகளை வெறுமனே விமர்சித்துக்கொண்டிருக்காது, செயற்பாடுகளுக்கு ஒத்துழைப்பு வழங்க வேண்டுமெனவும் அவர் இதன்போது எதிர்க்கட்சிகளிடம் கோரினார்.

வெளிநாடுகளில் இருந்து விமானங்களூடாக அழைத்து வரும் பயணிகள் மட்டுப்படுத்தப்பட்டுள்ளதோடு, இந்தியர்களை நாட்டுக்கு அழைத்து வருவது தற்காலிகமாக நிறுத்தி வைக்கப்பட்டுள்ளது.

இதனால் நாட்டுக்கு வரும் சுற்றுலாப் பயணிகள் எண்ணிக்கை வெகுவாகக் குறைந்துள்ளது. வெளிநாடுகளில் தொழில்புரியும் இலங்கையர்களை நாட்டுக்கு அழைத்துவரும் பணிகள் தொடர்ந்து முன்னெடுக்கப்பட்டு வருவதாகத் தெரிவித்த அவர், கொரோனா வைரஸ் தடுப்பூசிகளைச் செலுத்திக்கொள்ள வரும் பொதுமக்கள் சுகாதாரப் பாதுகாப்பு அறிவுறுத்தல்களைப் பின்பற்ற வேண்டுமென்றார்.

கொரோனா சிகிச்சை நிலையங்கள்

# விஸ்தரிப்பு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

அம்பாறை, மட்டக்களப்பு, திருகோணமலை ஆகிய மாவட்டங்களில் கொரோனா சிகிச்சை நிலையங்கள் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாக, கிழக்கு மாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் டொக்டர் ஏ.ஆர். எம். தௌபீக், நேற்று (13) தெரிவித்தார்.

கிழக்கு மாகாணத்தில் அண்மைக்காலமாக கொரோனாத் தொற்றாளர்களின் சதவீதம் அதிகரித்து வருவதால், மேலும் பல புதிய சிகிச்சை நிலையங்கள் ஸ்தாபிக்கப்படவுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.



சம்மாந்துறை, அன்வர் இஸ்மாயில் ஞாபகார்த்த ஆதார வைத்தியசாலையில் கொரோனாத் தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிப்பதற்கு புதிதாக அதி தீவிர சிகிச்சைப் பிரிவு ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும் அக்கரைப்பற்று பிரதேசத்திலும் கொரோனா சிகிச்சை நிலையம் ஆரம்பிக்கப்படவுள்ளதாகவும், மருதமுனை கொரோனா சிகிச்சை நிலையம், கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பிரிவு கொரோனா சிகிச்சை நிலையங்கள் மேலும் விஸ்தரிக்கப்படவுள்ளதாகவும் கூறினார்.

தேவைப்படும் பட்சத்தில் சம்மாந்துறையில் உள்ள தொழில்நுட்பவியல் கல்லூரி, தொழில் பயிற்சி நிலையம் போன்றவற்றில் கொரோனாத் தொற்று சிகிச்சை நிலையம் ஏற்படுத்தப்படுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

அதிக விலையில்

# உரம் விற்பனை செய்தால் வழக்கு

■ எம்.எஸ்.எம். ஹனீபா

பொத்துவில், அக்கரைப்பற்று ஆகிய பிரதேசங்களில், நுகர்வோர் பாதுகாப்புச் சட்டத்தை மீறி கூடுதலான விலைக்கு உரம் விற்பனை செய்த மற்றும் பதுக்கி வைத்த வர்த்தகர்களுக்கு எதிராக வழக்குத்தாக்கல் செய்யவுள்ளதாக, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்ட புலனாய்வு உத்தியோகத்தர் கே.எம்.ஏ.றிஸ்லி, நேற்று (13) தெரிவித்தார்.

கொவிட்-19 அசாதாரண சூழ்நிலையை சாதகமாகப் பயன்படுத்தி, தேசிய உரச் செயலகத்தால் தீர்மானிக்கப்பட்டுள்ள கட்டுப்பாட்டு விலையை மீறி, கூடுதலான விலைக்கு யூரியா உரம் விற்பனை செய்வதாக விவசாயிகளால் முறையிடப்பட்டுள்ளது.

இதனையடுத்து, அம்பாறை மாவட்டச் செயலாளர் டி.எம். எல். பண்டாரநாயக்கவின் ஆலோசனைக்கமைய, பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் அம்பாறை மாவட்டப் பொறுப்பதிகாரி எஸ்.என்.எம். சாலிய பண்டார தலைமையில், பாவனையாளர் அலுவல்கள் அதிகார சபையின் புலனாய்வு உத்தியோகத்தர்கள் சுற்றிவளைப்புகளை முன்னெடுத்துள்ளனர்.

அட்டாளைச்சேனை, நிந்தவூர், சம்மாந்துறை, இறக்காமம், அம்பாறை ஆகிய பிரதேச உர விற்பனை நிலையங்களிலும் திடீர் சுற்றிவளைப்புகளை மேற்கொள்வதற்கு நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாகவும், அவர் தெரிவித்தார்.

அரச, தனியார் நிறுவன வாடிக்கையாளரை

# கட்டுப்படுத்த திட்டம்

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

மட்டக்களப்பு மாவட்டத்தில் அரச, தனியார் வங்கிகள், நிதி நிறுவனங்கள் அடங்கலாக சகல நிறுவனங்களிலும் வாடிக்கையாளர்களை மட்டுப்படுத்தும் புதிய திட்டமொன்றை, நேற்று (13) முதல் சுகாதாரப் பிரிவினர் நடைமுறைப்படுத்தினர்.

வேகமாகப் பரவிவரும் கொரோனா வைரஸிலிருந்து பொதுமக்களைப் பாதுகாக்கும் வகையில் இத்திட்டம் முன்னெடுக்கப்படுகின்றது.

இதன் பிரகாரம், நிறுவனமொன்றுக்குள் ஒரு தடவையில் நூற்றுக்கு 25



சதவீத வாடிக்கையாளர்கள் மாத்திரமே செல்லமுடியும்.

மட்டக்களப்பு நகரில் நிறுவனங்களுக்குள் ஒரு தடவையில் செல்ல அனுமதிக்கப்பட்ட வாடிக்கையாளர்களின் எண்ணிக்கை அடங்கிய பிரசுரங்கள், கோட்டைமுனை பொதுச் சுகாதார பரிசோதகர் ரி.மிதுன்ராஜ் தலைமையில் நேற்று (13) காலை ஒட்டப்பட்டன.

# பியருடன் பெண் கைது

■ ரீ.எல்.ஜவ்பர்கான்

விலை உயர்ந்த பியர் போத்தல்களை, அனுமதிப் பத்திரமின்றி சட்டவிரோதமான முறையில் பதுக்கி வைத்திருந்த குற்றச்சாட்டின் கீழ் பெண்ணொருவர் கைது செய்யப்பட்டுள்ளார் என மட்டக்களப்பு மாவட்ட குற்ற விசாரணைப் பிரிவு பொறுப்பதிகாரி ஐ.பி. பண்டார தெரிவித்தார்.

கரடியனாறு பொலிஸ் பிரிவுக்குட்பட்ட சின்னக்குளம் கிராமத்தில் வீடொன்றில் மறைத்து வைக்கப்பட்டிருந்த 500 மில்லி லீற்றர் கொள்ளளவைக் கொண்ட 101 பியர் போத்தல்கள், நேற்று முன்தினம் (12) இரவு கைப்பற்றப்பட்டுள்ளன.

பொலிஸாருக்குக்



கிடைக்கப்பெற்ற தகவலொன்றின் அடிப்படையில், மேற்படி பியர் போத்தல்கள் கைப்பற்றப்பட்டன. அங்கிருந்த பெண்ணும் கைது செய்யப்பட்டுள்ளார்.

கைது செய்யப்பட்ட பெண்ணை நீதிமன்றத்தில் ஆஜர்படுத்தவும், பியர் போத்தல்களை நீதிமன்றத்தில் பாரப்படுத்தவும் நடவடிக்கை எடுத்துள்ளதாக கரடியனாறு பொலிஸார் தெரிவித்தனர்.

கல்முனை

# பொலிஸாருக்கு தடுப்பூசி ஏற்றல்

■ எம்.என்.எம். அப்ராஸ்

நாட்டில் வேகமாகப் பரவி வரும் கொரோனா வைரஸைக் கட்டுப்படுத்தும் நோக்கில், சுகாதாரத்துறை பல்வேறு முன்னெடுப்புகளை செய்துவருகிறது.

அதன் ஓர் அங்கமாக, கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் பணிமனையின் பணிப்பாளர் வைத்தியர் ஜி .சுகுணனனின் வழிகாட்டலில், கல்முனை தெற்கு சுகாதார வைத்திய அதிகாரி



வைத்தியர் ஏ.ஆர்.எம் .அஸ்மி தலைமையில், கொரோனா தடுப்பூசி ஏற்றும் நடவடிக்கை, கல்முனை தலைமையக பொலிஸ் நிலையத்தில் நேற்று (13) முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது, கல்முனை பிராந்திய உதவி பொலிஸ் அத்தியட்சகர் பி.எம்.ஜயரட்ன, கல்முனை பொலிஸ் நிலைய தலைமை பொலிஸ் பரிசோதகர் கே.டீ. சுஜித் பிரியந்த, கல்முனை பொலிஸ் நிலைய பெரும் குற்றவியல் பிரிவின் பொறுப்பதிகாரி சிரேஷ்ட பொலிஸ் பரிசோதகர் ஏ.எல். எம். ஜெமீல் உட்பட கல்முனை பொலிஸ் நிலையத்தில் கடமையாற்றும் பொலிஸார் கொரோனா தடுப்பூசியை பெற்றுக்கொண்டனர்.

# காத்தான்குடியில் தொற்று நீக்கம்



■ எம்.எஸ்.எம்.நூர்தீன்

காத்தான்குடி நகர சபை, காத்தான்குடி பொலிஸார் ஆகியோரின் ஏற்பாட்டில், காத்தான்குடி பிரதான வீதியில் கிருமித் தொற்று நீக்கி விசுறும் நடவடிக்கை, நேற்று முன்தினம் இரவு முன்னெடுக்கப்பட்டது.

காத்தான்குடி நகர சபையின் தலைவர் எஸ்.எச்.எம்.அஸ்பர், காத்தான்குடி பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி துமிந்த நயண சிறீ ஆகியோரின் மேற்பார்வையில், பொதுச் சுகாதார பரிசோதகர் ஏ.எல். எம்.பசீர் உட்பட சுகாதார அதிகாரிகள், காத்தான்குடி பொலிஸார், இராணுவத்தினர் இதில் இணைந்து கொண்டனர்.

முள்ளிவாய்க்கால் நினைவேந்தல்

# ‘முறையாக முன்னெடுப்போம்’

## சார்ள்ஸ் நிர்மலநாதன் எம்.பி உறுதி

■ எஸ்.றொசேரியன் லெம்பேட்

இம்முறை மட்டுப்படுத்தப்பட்ட அளவில், சுகாதார நடைமுறைகளுடன் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் இடம்பெறுமென, தமிழ்த் தேசிய கூட்டமைப்பின் பாராளுமன்ற உறுப்பினர் சார்ள்ஸ் நிர்மலநாதன் தெரிவித்தார்.

மன்னாரில் உள்ள அலுவலகத்தில், நேற்று (13) நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின் போதே, அவர் இவ்வாறு தெரிவித்தார்.

அங்கு தொடர்ந்துரைத்த அவர், உயிரிழந்த உறவுகளை நினைவுகூரும் முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் தின நிகழ்வை, கொரோனா தொற்றைக் காரணம் காட்டி, தடுக்கும் முகமாக, அரசாங்கத்தால்



பல்வேறு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன எனக் குற்றஞ்சாட்டினார்.

தமிழ் மக்களை முற்று முழுதாக அடக்கி, இலங்கையில் தமிழர்கள் என்ற ஓர் இனம் இருந்ததாக, ஒரு பதிவு கூட இருக்கக் கூடாது என்ற வகையில், நீண்ட காலத் திட்டத்தில், இந்த அரசாங்கம் செயற்பட்டு வருவதாகவும், அவர் கூறினார்.

புதன்கிழமை (12) இரவு, மத குருக்கள் சிலர், நினைவுக் கல் ஒன்றை அப்பகுதிக்கு கொண்டு சென்றபோது, அப்பகுதியில் இராணுவத்தினர் குவிக்கப்பட்டு, வந்தவர்களும் அச்சுறுத்தப்பட்டனர்.

அத்துடன், முள்ளிவாய்க்கால் நினைவேந்தல் மேற்கொள்ளும் பகுதியில் உள்ள தீபம் ஏற்றும் கல்லையும் உடைத்து சேதப்படுத்தியுள்ளனர் எனவும், சார்ள்ஸ் எம்.பி கூறினார்.

கொரோனா தொற்றுக் காரணமாக, உடனடியாக குறித்த விடயங்களை, சர்வதேச ரீதியில் முறையிடக் கூடிய சூழ்நிலைகள் இல்லை எனத் தெரிவித்த அவர், எனினும், சர்வதேச நாடுகளுக்கு நாங்கள் தெரியப்படுத்துவோமெனவும் கூறினார்.

மேலும், இம்முறை முள்ளிவாய்க்கால் நினைவேந்தலை மட்டுப்படுத்தப்பட்ட அளவில், சுகாதார நடைமுறைகளுடன் முன்னெடுப்போமெனவும், அவர் கூறினார்.

வவுனியாவுக்கு

# 155 தொற்றாளர்கள் அழைத்துவரப்பட்டனர்

■ க. அகரன்

வவுனியா பொருளாதார மத்திய நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள கொரோனா வைத்தியசாலைக்கு, 155 தொற்றாளர்கள், நேற்று முன்தினம் (12) அழைத்துவரப்பட்டுள்ளனர்.

நாட்டில் கொரோனா பரவல் அதிகரித்து வரும் நிலையில், தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, நாடளாவிய ரீதியில் கட்டில் வசதிகளைக் கொண்ட வைத்தியசாலைகள் அமைக்கப்பட்டு வருகின்றன.

அந்தவகையில், வவுனியாவில் பயன்பாடற்ற நிலையில் காணப்பட்ட பொருளாதார மத்திய நிலையம், 200 படுக்கை வசதிகள் கொண்ட வைத்தியசாலையாக மாற்றப்பட்டது.

இந்த வைத்தியசாலைக்கே, நேற்று முன்தினம் 155 கொரோனா தொற்றாளர்கள் அழைத்துவரப்பட்டு, அனுமதிக்கப்பட்டனர்.

# பால் புரையேறி சிசு பலி

■ செந்தூரன் பிரதீபன்

நல்லூரில், பால் புரையேறி, நான்கு மாதங்களேயான பெண் சிசுவொன்று, உயிரிழந்துள்ளது.

நேற்று முன்தினம் (12) இரவு, தாய் வழமைபோல் சிசுவுக்கு பால் கொடுத்துவிட்டுத் தூங்க வைத்துள்ளார். நேற்று (13) காலை சிசுவைத் தூக்கிய பொழுது, உடல் அசைவற்றுக் காணப்பட்டுள்ளது.

உடனடியாக யாழ்.



போதனா வைத்தியசாலைக்கு எடுத்துச் சென்று வைத்திய பரிசோதனைக்கு உட்படுத்தியபோது, சிசு ஏற்கெனவே இறந்துவிட்டதாகத் தெரிவிக்கப்பட்டது.

# கத்திக்குத்தில் சிறுவன் காயம்

■ நடராசா கிருஸ்ணகுமார்

கிளிநொச்சி, கண்டாவளை, பெரியகுளம் கிராமத்தில், சந்திரரூபன் சஜிபன் (வயது 16) என்ற சிறுவன் கத்திக்குத்துக்கு இலக்காகியுள்ளார்.

நேற்று முன்தினம் (12) இரவு 10.30 மணியளவில், நண்பர்களுக்கிடையே ஏற்பட்ட மோதல் முற்றி, அது கத்திக்குத்தில் முடிவடைந்துள்ளதாக, ஆரம்பக்கட்ட பொலிஸ் விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது எனத் தெரிவித்த பொலிஸார், சம்பவத்தில் காயமடைந்த சிறுவன், தர்மபுரம் வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார் என்றனர்.

# தயார் நிலையில் புதிய விடுதிகள்

■ என்.ராஜ்

கொரோனா வைரஸ் தொற்றாளர்களுக்கு சிகிச்சை அளிப்பதற்காக, யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் அமைக்கப்பட்ட புதிய விடுதிகள், சிகிச்சை வழங்குவதற்குத் தயார் நிலையில் உள்ளன.

நாட்டில் தீவிரமாகப் பரவி வரும் கொரோனா வைரஸ் தொற்று நிலைமையின் காரணமாக மாவட்டங்கள் தோறும் தொற்றுக்குள்ளாவோருக்கு சிகிச்சை வழங்கக் கூடியவாறான ஏற்பாடுகள், மாகாண சுகாதாரப் பிரிவினரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

இந்நிலையில், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில்,



சத்திர சிகிச்சை, அதி தீவிர சிகிச்சை, ஒட்சிசன் தேவைப்படுவோருக்கு சிகிச்சை வழங்கவும் தொற்றுக்குள்ளான கர்ப்பிணிகளுக்கு விசேட சிகிச்சை வழங்கவும், யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் இரண்டு விடுதிகள் அமைக்கப்பட்டன.

இவ்விரு விடுதிகளும், தற்போது, கொரோனா சிகிச்சைக்கென தயார் நிலையில் உள்ளன என வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்தன.

நினைவுத் தூபி உடைக்கப்பட்ட இடத்தில்

# ‘இராணுவத்தினரின் காலணித் தடங்கள்’

■ சண்முகம் தவசீலன், விஜயரத்தினம் சரவணன்

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி உடைக்கப்பட்ட இடத்தில், இராணுவத்தினரின் காலணித் தடங்களை ஒத்த தடயங்கள் இருப்பது, பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளதாக, வட மாகாண சபையின் முன்னாள் உறுப்பினர் துரைராசா ரவிகரன் தெரிவித்தார்.

முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்தில் அமைக்கப்பட்ட நினைவுத் தூபி, நேற்று முன்தினம் (12) இரவு சேதமாக்கப்பட்டது. இந்நிலையில், நேற்று (13) காலை, துரைராசா ரவிகரன், கரைதுறைப்பற்று பிரதேச சபை உறுப்பினர் சின்னராசா லோகேஸ்வரன் ஆகியோர் முள்ளிவாய்க்கால் நினைவு முற்றத்துக்குச் சென்று நிலைமைகளைப் பார்வையிட்டனர்.




இதன் பின்னர் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே, ரவிகரன் இவ்வாறு தெரிவித்தார்.

இது தொடர்பில் தொடர்ந்துரைத்த அவர், அந்த இடத்தைச் சூழ இராணுவம் குவிக்கப்பட்டிருந்தும், நினைவுத்தூபி உடைக்கப்பட்டதும், அவ்வாறு உடைக்கப்பட்ட இடத்தில் இராணுவத்திரின் காலணித் தடங்களை ஒத்த தடயங்கள் இருப்பதும், பலத்த சந்தேகத்தைத் தோற்றுவித்துள்ளது.

இறந்தவர்களின் நினைவாக அமைக்கப்பட்டுள்ள முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை காட்டுமிராண்டித்தனமாக, உடைத்துச் சேதப்படுத்துகின்றவர்கள், தமிழர்களுக்கு எவ்வாறு தீர்வைத் தருவார்கள் எனவும், அவர் கேள்வியெழுப்பினார்.

நீங்கள் எவ்வளவு அட்டூழியங்கள் புரிந்தாலும், எங்களுடைய நடவடிக்கைகள் தொடரும் எனவும், ரவிகரன் தெரிவித்தார்.



## கொரோனா செய்தித் துளிகள்

பலாங்கொடை வைத்தியசாலையின் பிரேத பரிசோதனைப் பிரிவு ஊழியர் ஒருவருக்கு கொரோனா. அவருடன் தொடர்பைப் பேணிய பொலிஸ் அதிகாரிகள் இருவர் உட்பட அவர்களது குடும்பத்தினரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர். (ஏ.ஏ.எம்.பாயிஸ்)

பொதுச் சுகாதார விதிமுறைகளை மீறுபவர்களைக் கண்டறிவதற்காக, கண்டி பொலிஸார், பொதுச் சுகாதார பரிசோதகர்கள் உள்ளிட்ட அதிகாரிகள் இணைந்து, கண்டி மாநகரில், நேற்று முன்தினம் (13) கடும் சோதனை நடவடிக்கைகளில் ஈடுபட்டனர். (சேன் செனவிரத்ன)

தம்புள்ளை நகருக்கு பயணக்கட்டுப்பாடு விதிக்கப்பட்டுள்ள நிலையில், தனிமைப்படுத்தல் சட்டவிதிமுறைகளை மீறி, பொதுமக்கள் நகருக்கு வருவதாகவும் வியாபார நிலையங்கள் சில திறந்திருக்கின்றன. இதனால், தம்புள்ளை நகரில் கொரோனா வைரஸ் பரவும் அபாயம் ஏற்பட்டுள்ளதாக, பொதுச் சுகாதார பரிசோதகர்கள் எச்சரித்துள்ளனர். (காஞ்சன குமரா ஆரியதாஸ)

பயணக்கட்டுப்பாடு அறிவிப்பால், பதுளை நகரிலுள்ள வியாபார நிலையங்கள், வங்கிகள் என்பவற்றில், சுகாதார விதிமுறைகளை மீறி பொதுமக்கள் திரண்டிருந்தனர். (பாலித ஆரியவன்ச)

கொரோனா தொற்றாளர்களுக்கு சிகிச்சையளிக்கும் நோக்கில், ஸ்ரீ லங்கா பொதுஜன பெரமுனவின் ஆலோசனைகளுக்கு அமைவாக, 500 கட்டில்கள் நிர்மாணிக்கும் பணிகள், மாத்தளையில் முன்னெடுக்கப்பட்டு வருகின்றன. (ரவிந்தர விராஜ் அபயசிறி)

### தனிமைப்படுத்தப்பட்ட குடும்பங்களுக்கு

# ‘உதவிக்கரம் நீட்டுங்கள்’

பெருந்தோட்டங்களில் தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்களுக்கு, உரிய நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்படுவதில்லை என குற்றஞ்சாட்டியுள்ள தொழிலாளர் தேசிய சங்கத்தின் தலைவரும் பாராளுமன்ற உறுப்பினருமான பழனி திகாம்பரம், இதனால், தனிமைப்படுத்தப்பட்ட பகுதிகளைச் சேர்ந்த மக்கள், பாரிய சிரமங்களை எதிர்கொண்டு வருகின்றனர் என்றார்.

எனவே, இவ்வாறு



தனிமைப்படுத்தப்படும் குடும்பங்களுக்கு உரிய நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க அரசாங்கம் முன்வர வேண்டுமென அவர் கோரிக்கை விடுத்துள்ளார்.

இதேவேளை, இன்ஜெஸ்ட்ரி மேற்பிரிவு, கீழ்ப்பிரிவு, பிளிங்கிபோனி, பார்த்போர்ட், அப்பகனி, ஹென்சி ஆகிய தோட்டப் பிரிவுகள், தொடர்ந்து தனிமைப்படுத்தப்பட்டு உள்ளதால் தொழிலாளர்கள் கடந்த இரண்டு வாரங்களாகத் தொழிலுக்குச் செல்ல முடியாத நிலை ஏற்பட்டுள்ளது. தொழிலாளர்களின் அன்றாட வருமானமும் பாதிக்கப்பட்டுள்ளது.


எனினும், இவர்களுக்கு உரிய நிவாரணங்கள் பெற்றுக்கொடுக்கப்படவில்லை என்று குற்றஞ்சாட்டப்படுகிறது. இவ்விடயம், தொழிலாளர் தேசிய சங்கத்தின் பிரதித் தலைவர் மயில்வாகனம் உதயகுமார் எம்.பியின் கவனத்துக்குக் கொண்டு செல்லப்பட்டுள்ளது.

இதனையடுத்து அவர், இன்ஜெஸ்ட்ரி தோட்டத்தை நிர்வகிக்கின்ற கம்பனியின் உயரதிகாரிகளுடன் தொடர்புகொண்டு மேற்பட்டி தோட்டங்களைச் சேர்ந்த மக்களுக்கு, உடனடியாக நிவாரணங்களைப் பெற்றுக்கொடுக்க நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

# கேகாலை மாவட்டத்தில் கூடியது கொரோனா

ரா.கமல்

கேகாலை மாவட்டத்தில், கொரோனா வைரஸ் தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருவதாகவும் நேற்று முன்தினம் (12) மாத்திரம், 155 தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர் என்றும் மாவட்ட சுகாதார சேவைகள் பணிப்பாளர் காரியாலயம்



அறிவித்துள்ளது.

இந்த எண்ணிக்கையுடன் மேற்படி மாவட்டத்தில் இதுவரை அடையாளம் காணப்பட்ட தொற்றாளர்களின் எண்ணிக்கை 5,362 ஆக உயர்வடைந்துள்ளது.

தெஹியோவிட்ட சுகாதார அதிகாரி பிரிவிலேயே அதிகளவான தொற்றாளர்கள் இனங்காணப்பட்டுள்ளனர். மேற்படி பிரிவில் இதுவரை 960 பேர் இனங்காணப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.



# கொட்டகலையில் கொரோனா விழிப்புணர்வு

எஸ்.கணேசன்

கொரோனா வைரஸ் பரவலைத் தடுப்பதற்காக, கொட்டகலை நகரில் விசேட விழிப்புணர்வு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதுடன் சுகாதார விதிமுறைகளைப் பின்பற்றாதவர்கள் கடுமையாக எச்சரிக்கை செய்யப்பட்டு வருகின்றனர்.

வியாபார நிலையங்களில், ‘கொரோனா இன்னும் ஒழியவில்லை’, ‘முகக்கவசம் முறையாக அணிய வேண்டும்’, ‘சமூக இடைவெளியைப் பேண வேண்டும்’ போன்ற வாசகங்கள் எழுதிய ஸ்டிக்கர்கள் ஒட்டப்பட்டு வருகின்றன.

இதன்போது வியாபார நிலையங்களில், முறையாக முகக்கவசம் அணியாது இருந்தவர்கள், சமூக இடைவெளியைப் பேணாது இருந்தவர்கள், சுகாதார பொறிமுறைக்கு அமைவாக தொற்று நீக்கி மற்றும் பதிவேடுகள் பேணப்படாத வியாபார நிலையங்களின் உரிமையாளர்கள், ஊழியர்கள் கடுமையாக எச்சரிக்கப்பட்டுள்ளனர்.

சுகாதார பொறிமுறைகளை முறையாகக் கடைப்பிடிக்காதவர்களுக்கு எதிராகக் கடும் சட்ட நடவடிக்கை எடுக்க உள்ளதாக, பொலிஸார் எச்சரித்துள்ளனர்.

இதேவேளை, பொதுப்போக்கு வரத்துகளில், சமூக இடைவெளி இல்லாது பயணித்தவர்களும் கடுமையாக எச்சரிக்கப்பட்டதுடன் வாகனங்களிலிருந்து இறக்கிவிடப்பட்டனர்.





# கர்ப்பிணிகளுக்கு ஓர் அறிவுரை

சுமணசிறி குணத்திலக்க

மாதாந்தம் வழங்கப்படும் போசணை உணவுப் பொதிக்கான வவுச்சரைப் பெற்றுக்கொள்வதற்காக, பிரதேச செயலகத்துக்கு வர வேண்டாம் என்று, புத்தள பிரதேச செயலகம், கர்ப்பிணிகளிடம் கோரிக்கை விடுத்துள்ளது.

வவுச்சரைப் பெற்றுக் கொள்வது தொடர்பில் கர்ப்பிணி ஒருவர் எழுதிய கடிதத்துடனும் அதனை நிரூபிப்பதற்கான சான்றிதழ்களுடனும் கர்ப்பிணிகள் சார்பில் ஒருவர் பிரதேச செயலகத்துக்கு வந்து வவுச்சரைப் பெற்றுக்கொள்ள முடியுமென பிரதேச செயலாளர் ஆர்.எம்.எஸ்.



திலகரத்ன தெரிவித்தார்.

கொரோனா வைரஸ் பரவலின் மூன்றாம் அலையை, இலங்கை எதிர்கொண்டுள்ள நிலையில், இதுவரை இரு கர்ப்பிணிகள் கொரோனா தொற்றால் மரணமடைந்துள்ளனர். தற்போதைய வைரஸானது கர்ப்பிணிகளை மிக வேகமாகத் தாக்குவதைக் கருத்திற்கொண்டே, இத்தகைய அறிவிப்பை புத்தள பிரதேச செயலகம் விடுத்துள்ளது.



# நீராவி பிடித்தல்...

பா.பாலேந்திரன்

கொரோனா வைரஸ் தொற்றிலிருந்து தொழிலாளர்களைப் பாதுகாக்கும் நோக்கில், மூலிகைகள் கலந்த கொதிநீரில், நீராவி பிடிக்கும் செயற்பாடு, ஹொரண பிளாண்டேசன் நிறுவனத்தின் கீழ் இயங்கும் லிந்துலை மவுசாஎல்ல தோட்டத்தில் நேற்று (13) முன்னெடுக்கப்பட்டது.

தொழிலாளர்கள் காலையில், கடமைக்குச் செல்லும் முன்பு, மூலிகைகள் கலந்த நீராவியை பிடித்துவிட்டுச் செல்ல வேண்டும் என்று, தோட்ட நிர்வாகம் தொழிலாளர்களுக்கு அறிவுறுத்தியுள்ளது.



# ‘கர்ப்பிணிகளைக் கவனிக்கவும்’

கொரோனா வைரஸ் பரவலைக் கருத்திற்கொண்டு, பெருந்தோட்டங்களில் பணிபுரியும் கர்ப்பிணிகளுக்கு, சம்பளத்துடன் கூடிய விடுமுறையை வழங்குவதற்குப் பெருந்தோட்ட நிறுவனங்கள் முன்வர வேண்டும் என்று, இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத்தின் பொதுச் செயலாளர் வடிவேல் சுரேஸ் எம்.பி கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் மேலும்



கருத்துரைத்துள்ள அவர், உள்நாட்டு அலுவல்கள் அமைச்சின் ஊடாக வெளியிடப்பட்டுள்ள சுற்றறிக்கைக்கு அமைய, அரச துறைகளில் பணியாற்றும் கர்ப்பிணிகளுக்கு, சம்பளத்துடன் கூடிய விடுமுறை வழங்கப்பட்டுள்ளது. ‘ஒரே நாடு; ஒரே சட்டம்’ என்ற ரீதியில், அந்தச் சலுகை பெருந்தோட்டங்களில் பணிபுரியும் கர்ப்பிணிகளுக்கும் வழங்கப்பட வேண்டும். இதுதொடர்பில், அரசாங்கம் கவனம் செலுத்த வேண்டுமெனக் கோரியுள்ளார்.

# ‘உப-தபாலகங்களுக்கு உயிர்கொடுங்கள்’



எஸ்.சுஜிதா

நுவரெலியா மாவட்டத்தில், கொட்டகலை, அக்கரப்பத்தனை ஆகிய பிரதேச சபை நிர்வாகங்களுக்கு உட்பட்ட பகுதிகளில், சுமார் 20 வருடங்களுக்கு முன்னர் நிர்மாணிக்கப்பட்ட உப-தபாலகங்கள், கவனிப்பாரற்ற நிலையில் பாழடைந்து காணப்படுகின்றன.

லிந்துலை, எல்ஜின், ஹென்போல்ட் ஆகிய தோட்டங்களிலும் தலவாக்கலை கொரின் தோட்டத்திலும் இவ்வாறாக, உப- தபாலகங்கள் எவ்வித பயன்பாடுமின்றி, கவனிப்பாரற்ற நிலையில் காணப்படுகின்றன.

மேற்படி உப-தபாலகங்களுக்கு மீண்டும் புத்துயிர் அளித்து, அவற்றினூடாகத் தோட்ட மக்களுக்கு சீரான தபால் விநியோகத்தை முன்னெடுப்பதற்கு சம்பந்தப்பட்ட அதிகாரிகள் முன்வர வேண்டும் என்று, பிரதேச மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

### கேகாலை மாவட்டத்தில்

# எட்டு பாடசாலைகள் தரமுயர்வு

ரா.கமல்

கேகாலை மாவட்டத்தில், 8 தமிழ்மொழி பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாக தரமுயர்த்தப்பட்டுள்ளன.

கல்வி அமைச்சின் 1,000 பாடசாலைகளை அபிவிருத்தி செய்யும் வேலைத்திட்டத்தில், இம்மாவட்டத்தில் மொத்தமாக 38 பாடசாலைகள் தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன. இவற்றில் தமிழ்மொழி பாடசாலைகள் 8 உள்ளடங்குகின்றன.

4 தமிழ்ப் பாடசாலைகளும் 04 முஸ்லிம் பாடசாலைகளுமே இவ்வாறு தேசிய பாடசாலைகளாகத் தரமுயர்த்தப்பட்டுள்ளன.

தெஹியோவிட்ட கல்வி வலயத்துக்கு உட்பட்ட தெரணியகலை ஸ்ரீ கதிரேசன், எட்டியாந்தோட்டை புனித மரியாள், தெஹியோவிட்ட தமிழ் மகா வித்தியாலயம், கன்னந்தொட்டை சுலைமானியா மத்திய கல்லூரி, கேகாலை கல்வி வலயத்தில் கேகாலை புனித மரியாள் தமிழ் மகா வித்தியாலயம், வரக்காபொல பாபுல் ஹசன் முஸ்லிம் மகா வித்தியாலயம், மாவனெல்லை கல்வி வலயத்தில் அல்-அசார் முஸ்லிம் மகா வித்தியாலம், பதுர்தியா முஸ்லிம் மகா வித்தியாலயம் ஆகிய பாடசாலைகளே இவ்வாறு தேசிய பாடசாலைகளாகத் தரம் உயர்த்தப்பட்டுள்ளன.

பாடசாலைகளின் தரமுயர்வு குறித்த கடிதங்கள் கல்வி அமைச்சினால், பாடசாலைகளின் அதிபர்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன.

# ஆயுர்வேத பொருட்கள் கையளிப்பு

நிலமேகம் பிரசாத், பி.கேதீஸ்

நுவரெலியா பிரதேச சபைக்கு உட்பட்ட மட்டுக்கலை சென்கூம்ஸ் (டி.ஆர்.ஐ) தோட்டத்தில், தனிமைப்படுத்தப்பட்டுள்ள குடும்பங்களுக்கு, ஆயுர்வேத மருந்துப் பொருட்கள் கையளிக்கப்பட்டன.

நுவரெலியா பிரதேச சபை தவிசாளர் வேலு யோகராஜின் வேண்டுகோளுக்கிணங்க, சபையின் ஆயுர்வேத மருத்துவப் பிரிவின் மூலம், மருந்துப் பொருட்கள் தோட்ட அதிகாரிகளிடம், நேற்றுமுன்தினம் (12) கையளிக்கப்பட்டன.



# நினைவுகூரலை சட்டங்கள் தடுத்தாண்டால் மனஸ்தாபங்களே ஏற்படும்

அனைவருக்குமான அறிவித்தலொன்றை பிறப்பித்தால், அது தன்னை மட்டுமே குறிவைத்ததாகப் பலரும், தங்களுக்குத் தாங்களே நினைத்துக்கொள்வர். அதைப்போலதான், அமுலில் இருக்கும் 76 மணிநேர முழு அடைப்புக்கும் பல்வேறான கற்பிதங்கள் உருவாக்கப்படுகின்றன.

முடக்கமா, பயணக்கட்டுப்பாடா? என்பது தொடர்பில் தெளிவே இல்லாமல் இருந்தது. அதன்பின்னர், உத்தியோகபூர்வமாக விடுக்கப்பட்ட அறிவிப்பு, இருந்த கொஞ்சநெஞ்ச தெளிவையும் சுக்குநூறாக்கிவிட்டது.

ரமழான் பெருநாளை இலக்குவைத்தே, பயணக் கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டதாக, குற்றச்சாட்டுகள் முன்வைக்கப்படுகின்றன. இந்தப் பயணத்தடை, வெசாக் நிறைவடையும் வரையிலும் நீடிக்குமாயின், 'ரமழான் இலக்கு' என்பது பொய்த்துவிடும்; நீடிக்காவிடின், பிரித்தாளுகை அம்பலமாகும்.

தமிழ்-சிங்கள புத்தாண்டுக்கு முன்னர், இவ்வாறான கட்டுப்பாடுகள் கடுமையாக்கப்பட்டு இருந்தால், கொரோனாவின் மூன்றாவது தாண்டவத்துக்குள் சிக்கித்தவிக்க வேண்டிய நிலைமை ஏற்பட்டிருக்காது.

மறுபுறத்தில், முள்ளிவாய்க்கால் நினைவு வாரத்தையும், நினைவேந்தலையும் தடுத்தாற்கொள்ளவே, சட்டம் இறுக்கப்பட்டதாக மற்றுமொரு தரப்பினர் குற்றம் சாட்டுகின்றனர். ஆக, சிறுபான்மை இன மக்களே, அதியுச்ச இலக்காக வைக்கப்பட்டு உள்ளனர் எனப் பலரும் கருதுகின்றனர். அவற்றையெல்லாம் உறுதிப்படுத்தும் வகையிலான சம்பவங்களே அரங்கேற்றப்படுகின்றன.

அதிலொன்று, முள்ளிவாய்க்கால் நினைவுச்சின்னம் சிதைக்கப்பட்டு, பொது நினைவுக்கல் மாயமாகி உள்ளமையைக் குறிப்பிடலாம். வடக்கு, கிழக்கில், பாதுகாப்பு படையினரின் கண்களில் மண்ணை இலகுவில் தூவிவிட முடியாது. ஏனெனில், அங்கிருக்கும் சனத்தொகையை விடவும் படையினரின் எண்ணிக்கை அதிமாகும் என்பதே, அங்குள்ள மக்கள் பிரதிநிதிகளின் குற்றச்சாட்டாகும்.

முள்ளிவாய்க்காலில் குழுமி இருந்தவர்களுக்கும், அங்குவந்த படையினர், பொலிஸார் ஆகியோருக்கு இடையில், கடுமையாக வாக்குவாதங்கள் இடம்பெற்றுள்ளன. அதன்பின்னரே, இரவோடு இரவாக, நினைவுத்தூபி சிதைக்கப்பட்டுள்ளது. இறுதியுத்தத்தில் உயிர்நீத்தவர்களை நினைவுகூர்ந்து நிர்மாணிக்கப்பட்ட நினைவுச்சின்னம் சிதைக்கப்பட்டுள்ளது. இது ஓர் இனத்தின் அடையாளத்தை இல்லாதொழிக்கும் செயற்பாடுகளில் ஒரு கட்டம் மட்டுமேயாகும்.

பொலிஸாரின் கூற்றின் பிரகாரம், 'கொரோனா சட்டம்' முள்ளிவாய்க்காலில் பாய்ந்திருக்குமாயின், குருந்தூரில் படை அதிகாரிகள் புடைசூழ, பிரித் ஓதும் போது, எங்குபோனது அந்த 'கொரோனா சட்டம்'? இங்குதான், 'ஒருநாடு; இருசட்டங்கள்' வெளிசத்துக்கு வந்தன.

மரணித்த தங்களுடைய உறவினர்களை, ஒவ்வொருவரும் வருடாவருடம் நினைவுகூர்வர், யுத்தத்தில் உயிரிழந்த படையினருக்கான தேசிய நினைவுகூரல், மே 19ஆம் திகதி அனுஷ்டிக்கப்படுகிறது. இலங்கையில் மரணித்த இந்திய இராணுவத்தினரும் மறக்கப்படுவதில்லை. கார்த்திகை வீரர்களும் நினைவு கூரப்படுகின்றனர்.

நினைவுகூரலை சட்டங்கள் தடுத்தாண்டால், மனஸ்தாபங்களே ஏற்படும். அதில் குளிர்காய்ந்து, உண்மையான பிரச்சினைகளை மூடி மறைப்பதற்கு இடமளிக்கக்கூடாது. மரணித்தவர்களை நினைவுகூருவதற்கு இடமளிப்பதன் ஊடாக, மனத்திலிருக்கும் பாரம் இறக்கிவைக்கப்படும் என்பதை, ஆட்சித் தரப்பு உணர்ந்துகொள்வது நாட்டுக்கு நலம்.

## தமிழ்Mirrorக்கு எழுதுங்கள்



தமிழ்மிரர் வாசகர்களுக்கு வணக்கம். எமது பத்திரிகைக்கு உங்களுடைய ஆக்கங்கள், விமர்சனங்களை அனுப்பிவைக்கலாம். கருதுகளையும் வரவேற்கின்றோம்.


அத்துடன் உங்கள் பிரதேசங்களில் இடம்பெறும் விளையாட்டு, கலை, கலாசார நிகழ்வுகளை புகைப்படங்களுடன் அனுப்பிவைக்கலாம்.

பிரதேசத்தில் நிலவும் பிரச்சினைகள் தொடர்பிலும் எழுதலாம்.

அனுப்பவேண்டிய முகவரி
தமிழ்மிரர்
ஆசிரியர் பீடம்
No 8. Hunupitiya Cross Road, Colombo 2. P.O. Box 1136

Editorial: Tel: 011 2 479 372-8, Fax: 011 2 304 114
Marketing Manager (Dir.) 011 2 479 822, 077 3421 476
Circulation Manager (Dir.) 011 2 479 672, 077 3 219 775,
Subscription Manager (Dir.) 011 2 479 626, 011 2 479 628, 077 3 502 183
E-mail: tamilmirror@wijeya.lk



## வாழ்வியல் தரிசனம்

ஒரு சின்ன விடயத்துக்காக நெஞ்சத்தை உருட்டாதீர்கள். அது உங்கள் தற்றுணிபை இழப்பது போலாகும். சில விடயங்களை மிகச் சாதாரணமாக எடுக்க வேண்டும். மிக இயல்பாக இருங்கள். எல்லாமே சாதாரணமாகி விடும்.

சில வேளைகளில், வேண்டாத நபர்கள் கூட, உங்களைச் சீண்டி, மனதைக் குழப்பலாம். சிலவிடயங்களைக் காது கொடுத்துக் கேட்பதே தப்பாகிவிடுகிறது.

நீங்கள் நியாயபூர்வமாக இருந்தால் அச்சம் எதற்கு? உலகில், எத்தனையோ மக்களுடன் பழகியவண்ணம் இருக்கின்றோம். ஒவ்வொருவரும் ஒவ்வொரு ரகம். இதுதான் இயல்பானது.

பிறர் குற்றம் குறைகளை ஆராய்வது எமது பணி அல்ல! அதனால், அமைதி இழப்பு, தேவையற்ற விதத்தில் உட்செலுத்தப்படுகின்றது. இந்தநிலை, எவருக்கும் உகந்தது இல்லை. சந்தோசமாக இருக்கும் வழிகளைத் தேடுக. இது மிகவும் இலகுவானது. இதனால் மனச்சுமை அகலும். இவை தொடர்ந்து உங்களை ஆட்கொண்டு விடும்.

சின்னச்சின்ன நல்ல விடயங்கள் கூடத் திருப்தியை உண்டு பண்ணும். இந்தப் பரமதிருப்பதியை வளர்த்தெடுத்து, விரிவுபடுத்துவது உங்கள் கடமையாகட்டும். நல்ல பொழுதுபோக்கும் பக்தி உணர்வும் ஆன்மாவைச் சிலிர்ப்பூட்டும். உணர்க!

-பருத்தியூர் பால. வயிரவநாதன்

பற்றி எரியும் பலஸ்தீனம்:

# நாமென்ன செய்வது?



தெ. ஞாலசீர்த்தி மீநிலங்கோ

இஸ்ரேலின் அடாவடியால் பலஸ்தீனம் இப்போது பற்றி எரிந்து கொண்டிருக்கிறது. நிச்சயமின்மையே நிச்சயமாகிப்போன ஒரு சமூகத்தின், சொல்லொனாத் துயர்களின் இன்னோர் அத்தியாயம், இப்போது அரங்கேறுகிறது.

இந்தக் கட்டுரையை எழுதிக் கொண்டிருக்கும்போது, காஸாவில் இஸ்ரேலிய விமானங்கள் குண்டுமழை பொழிந்து கொண்டிருப்பதாக, பதுங்கு குழிகளில் இருந்து பலஸ்தீனிய நண்பர்கள், மின்னஞ்சல் அனுப்பிக் கொண்டிருக்கிறார்கள்.

ஒரு தசாப்தகாலமாக நீடித்த அமைதி, முடிவுக்கு வந்துவிடுமோ என்று அரசியல் அவதானிகள் அஞ்சுகிறார்கள். சர்வதேச தலைவர்கள், இஸ்ரேலைத் தடவிக் கொடுத்தபடி கவலை வெளியிடுகிறார்கள்.

ஒடுக்கப்பட்ட மக்களின் குரல்கள் என்று தம்மைச் சொல்லிக்கொள்ளும் உள்ளூர் அரசியல்வாதிகள், நடப்பதற்கும் தமக்கும் எதுவிதத் தொடர்புமில்லை எனும் தொனியில் அமைதி காக்கிறார்கள்.

ஜெருசலத்தில் இப்போது காணப்படும் பதற்றம் புதிதல்ல. ஆனால், கடந்த பல ஆண்டுகளாக மிகவும் அமைதியாக இருந்த நிலத்தில், அண்மைய நிகழ்வுகள் உருவாக்கியிருக்கும் பதற்றம் பெரிது; கவலையளிக்கக் கூடியது. இரண்டு முக்கிய நிகழ்வுகள், இப்பதற்றத்துக்கு வழி கோலியுள்ளன.

முதலாவது, பலஸ்தீனர்கள் வசிக்கும் மேற்குக்கரையில், அதிகளவான சட்டவிரோதமான இஸ்ரேலியக் குடியிருப்புகள் உருவாக்கப்படுவது தூண்டப்படுகிறது. தங்களது நிலங்களில், இஸ்ரேலியர்கள் அடாவடியாகக் குடியேறுவது, பலஸ்தீனியர்களின் பெரும் பிரச்சினையாக உள்ளது.

இரண்டாவது, ரமழான் தொடங்கியது முதல், பலஸ்தீனியர்கள் வழிபடுவதற்கும் ஒன்றுகூடுவதற்கும் தொடர்ச்சியான தடைகளும் கட்டுப்பாடுகளும் விதிக்கப்பட்டு வந்துள்ளன. இது பலஸ்தீனியர்களை வேண்டுமென்று ஆத்திரமூட்டும் செயல்.

இவை இரண்டுக்கும் மட்டுமன்றி, இன்று பலஸ்தீனம் பற்றி எரிவதற்குக் காரணம், இஸ்ரேலின் அரசியல் எதிர்நோக்கும் நெருக்கடியுமாகும்.

கிழக்கு ஜெருசலத்தின் ஷேக் ஜராப் பகுதியில், பலஸ்தீனியக் குடியிருப்பாளர்கள் இஸ்ரேலிய சட்டவிரோத குடியேற்றவாசிகளோடு ஒரு நீண்ட சட்டப் போராட்டத்தை நடத்தி வருகிறார்கள். இஸ்ரேலிய குடியேற்றவாசிகள், அந்த நிலம் வரலாற்று ரீதியாகத் தங்களுடையது என்றும், எனவே அங்கு குடியிருக்கும் பலஸ்தீனியர்கள் அங்கிருந்து அப்புறப்படுத்தப்பட வேண்டும் என்றும் கோருகிறார்கள். இந்தப் பிரச்சினை, பலஸ்தீனியர்களின் நிலம் தொடர்பான, முக்கியமான சிக்கலாகும்.

அதிதீவிரத் தேசியவாத சியோனிச அமைப்புகளினதும் இஸ்ரேலிய நீதிமன்றின் ஆதரவுடனும் இஸ்ரேலிய குடியேற்றவாசிகள் அந்நிலத்துக்கு உரிமை கோருகிறார்கள். அவர்கள் 1948ஆம் ஆண்டுக்கு முன், இந்த நிலமானது யூத சமய அமைப்புக்குச் சொந்தமாக இருந்தது என்று வாதிடுகிறார்கள். 1970ஆம் ஆண்டு உருவாக்கப்பட்ட இஸ்ரேலியச் சட்டமானது, கிழக்கு ஜெருசலமில் தங்கள் காணிகளை மீட்டுக்கொள்ளும் உரிமையை, இஸ்ரேலியர்களுக்கு வழங்குகிறது.

ஆனால், அந்த உரிமை அங்கு வசிக்கும் பலஸ்தீனர்களுக்குக் கிடையாது. இதனால், 1948ஆம் ஆண்டு, இஸ்ரேலின் உருவாக்கத்தின் பின்னர் பலஸ்தீனியர்கள், இஸ்ரேலிடம் இழந்த நிலங்களைப் பெற்றுக் கொள்ள முடியாதுள்ளது. இஸ்ரேலியச் சட்டம் அதற்கு அனுமதிக்கவில்லை.

1967ஆம் ஆண்டு ஜோர்டானிடம் இருந்து கைப்பற்றிய கிழக்கு ஜெருசலமை, இஸ்ரேல் தனது பகுதியாக்கியதோடு, பலஸ்தீனியர்களையும் கொஞ்சம் கொஞ்சமாக விரட்டியது. அதன் தொடர்ச்சியே, இப்போது நடக்கின்றது. கிழக்கு ஜெருசலமில், இஸ்ரேலியக் குடியேற்றங்களை அமைத்து, பலஸ்தீனியர்களை அங்கிருந்து அகற்றி, குடிசனப் பரம்பலில் மாற்றத்தை ஏற்படுத்த இஸ்ரேல் முனைகிறது.

இஸ்ரேலியர்கள் ஆண்டுதோறும் கொண்டாடும் 'ஜெருசலேம் தினம்', கடந்த 10ஆம் திகதி நினைவுகூரப்பட்டது. இது 1967ஆம் ஆண்டு, போரில் ஜோர்டானில் இருந்து கிழக்கு ஜெருசலேம் கைப்பற்றப்பட்டு, இஸ்ரேலுடன் சட்டவிரோதமாக இணைக்கப்பட்டதை இந்த நாள் குறிக்கிறது.

இந்நாளில், சியோனிஸ்டுகள் பலஸ்தீனியர்களை இழிவுபடுத்தும் நடவடிக்கைகளில் ஈடுபடுவது வழக்கம். இம்முறையும் அதன் வழித்தடத்தில், வெற்றிக் கொண்டாட்ட ஊர்வலம், ஜெருசலேம் நகரின் அரபுக் குடியிருப்புப் பகுதிகளின் ஊடாகத் திட்டமிடப்பட்டது.

திட்டமிட்ட இந்த ஊர்வலமானது, வன்முறையைத் தூண்டக்கூடும் என்றும் இதன் தாக்கம் மேற்குக் கரையிலும் காசாவிலும் பரவக்கூடும் என்றும் உயர் பாதுகாப்பு அதிகாரிகள் எச்சரித்திருந்தார்கள்.

இது இஸ்ரேலின் அரசியல் உயரடுக்குகளில் விவாதப்பொருளாகியது. இருந்தபோதும், திட்டமிட்டபடி ஊர்வலம் நடக்கும் என பொலிஸ் செய்தித்தொடர்பாளர் அறிவித்தார். ஊர்வலத்தில் 'அராபியர்களுக்கு மரணம்' என்ற கோசங்களோடு சியோனிஸ்டுகள், அராபியர்கள் வாழும் குடியிருப்புப் பகுதிகளினூடாக வலம் வந்தார்கள்.

இதேவேளை, வெள்ளிக்கிழமை (07) முஸ்லிம்களின் மூன்றாவது புனித தலமாகக் கொள்ளப்படும் அல்-அஸ்கா மசூதிக்குள், சப்பாத்துகளுடன் நுழைந்த இஸ்ரேலிய இராணுவத்தினர் அங்கிருந்தோரைத் தாக்கினார்கள். இதேபோல, ஞாயிற்றுக்கிழமை (09) இரவு தொழுகைகளுக்குப் பிறகு, பலஸ்தீனியர்கள் கூடுகின்ற டமாஸ்கஸ் வாசலின் அருகே, அங்கு கூடியிருந்த பலஸ்தீனியர்களுக்கு எதிராக, இராணுவத்தினர் வன்முறையில் இறங்கினார்கள்.

பலஸ்தீனர்கள் தினந்தினம் வன்முறைகளுக்கு ஆளாகிவரும் நிலையில், மேற்குலக நாடுகள், தங்கள் மறைமுக ஆதரவை இஸ்ரேலுக்கு வழங்குகிறார்கள். அமெரிக்கா, "வன்முறையைத் தணிக்க, இரு தரப்பினரும் முயற்சிக்க வேண்டும்" என்று கோருகிறது. ஏனைய மேற்குலக நாடுகளும், இதே தொனியிலேயே பேசுகின்றன. வன்முறையை மேற்கொள்வோரையும் ஆளாகுவோரையும் சமப்படுத்தும் செயலிலேயே, இந்நாடுகளின் அறிக்கைகள் அமைந்திருக்கின்றன.

இஸ்ரேலின் செயல்கள், வேண்டுமென்றே திட்டமிட்டுப் பலஸ்தீனியர்களைக் கோபமூட்டி, வன்முறையைத் தூண்டும் நடவடிக்கைகளாகவே காணப்படுகின்றன. இஸ்ரேலியப் பிரதமர் பெஞ்சமின் நெத்தன்யாகு, தனது அரசியல் எதிர்காலத்தைத் தக்கவைப்பதற்காக, இச்செயல்களைச் செய்கிறார் என, இஸ்ரேக்குள் இருக்கும் முற்போக்குச் சக்திகள் குற்றம் சாட்டுகின்றன.

கடந்த இரண்டாண்டுகளில், இஸ்ரேலியப் பாராளுமன்றமான கினசட்டிற்கான தேர்தல், நான்கு முறை நடைபெற்றுள்ளது. நான்கு தடவையும் எந்தவொரு கட்சியாலும் பெரும்பான்மையைப் பெற்றுக் கொள்ள முடியவில்லை.

இறுதியாகத் தேர்தல், 2021 மார்ச் மாதம் 23ஆம் திகதி நடைபெற்றது. எந்தவொரு கட்சியும் அறுதிப் பெரும்பான்மை பெறாத நிலையில், ஜனாதிபதி ஆட்சியமைக்கும் முதல் வாய்ப்பை, அதிகளவான ஆசனங்களைப் பெற்ற பிரதமர் நெத்தன்யாகுவுக்கு வழங்கினார். மே மாதம் நான்காம் திகதிக்குள் அவர் பாராளுமன்றப் பெரும்பான்மையை நிரூபிக்க வேண்டியிருந்தது. ஆனால், இறுதித் திகதிக்குள் அவரால் பெரும்பான்மையை நிரூபிக்க முடியவில்லை.

இந்நிலையில், ஆட்சியமைக்கும் வாய்ப்பை ஜனாதிபதி, எதிர்க்கட்சித் தலைவர் யயிர் லப்பிட்டுக்கு வழங்கியுள்ளார். அவர், அரசாங்கத்தை அமைப்பதற்கு ஜூன் இரண்டாம் திகதி வரை, கால அவகாசம் உண்டு.

லப்பிட்டு ஆட்சி அமைப்பதற்கு, பாராளுமன்றத்தில் பிரதிநிதித்துவம் உள்ள பலஸ்தீனியப் பிரதிநிதிகளின் ஆதரவு வேண்டும். லப்பிட்டுக்கு ஆட்சி அமைக்கும் வாய்ப்பை, ஜனாதிபதி வழங்கியது முதலே, பலஸ்தீனர்களுக்கு எதிரான வன்முறைகள் கட்டவிழ்த்து விடப்பட்டன.

திங்கட்கிழமை (10) பாராளுமன்றில் உள்ள பலஸ்தீன உறுப்பினர்களுக்கும் லப்பிட்டுக்கும் இடையில் உடன்பாடு எட்டப்பட்டுள்ளது என்ற செய்திகள் வரத் தொடங்கிய பின்னணியிலேயே, பலஸ்தீனியர்களுக்கு எதிரான வன்முறைகள் புதிய கட்டத்தை எட்டின. எதிர்வரும் ஜூன் இரண்டாம் திகதிக்குள், லப்பிட் ஆட்சியமைக்காத பட்சத்தில், இன்னொரு தேர்தல் வருவது தவிர்க்க இயலாதது. இன்னொருவர் பிரதமராகுவதை, நெத்தன்யாகு விரும்பவில்லை. எனவே, அதற்கு முட்டுக்கட்டை போட்டு, இன்னொரு தேர்தலுக்கு வழிகோல அவர் விரும்புகிறார்.

இதற்கிடையில், பலஸ்தீனர்களைத் தூண்டி, அவர்களை இரும்புக்கரம் கொண்டு அடக்கி, அதன் மூலம் கிடைக்கின்ற பெயரைப் பயன்படுத்தி, அடுத்த தேர்தலில் வெற்றிபெற்று விடலாம் என்று நெத்தன்யாகு நினைக்கிறார். அவருக்குச் சாதகமான திசையிலேயே நிகழ்வுகள் நடக்கின்றன.

இதேவேளை, பலஸ்தீன அதிகார சபையின் தலைவராக இருக்கின்ற முஹமட் அப்பாஸ், எதிர்வரும் 22ஆம் திகதிக்குத் திட்டமிடப்பட்டிருந்த தேர்தலை ஒத்திவைத்தமை குறிப்பிடத்தக்கது.

2006ஆம் ஆண்டுக்குப் பிறகு, பலஸ்தீனத்தில் தேர்தல்கள் நடைபெற இருந்தன. இம்முறை தேர்தலில் அப்பாஸின் பத்தா கட்சி, தோல்வியடைவது உறுதி என்ற நிலையில் இம்முடிவு எட்டப்பட்டது. இத்தேர்தலில், எதிர்க்கட்சியும் காசா பகுதியை ஆட்சிசெய்வதுமான ஹமாஸ் வெற்றிபெறுவது உறுதியாகவுள்ள நிலையில், இம்முடிவு பெரும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

பலஸ்தீனர்கள் உலகளாவிய ஒடுக்கப்பட்ட மக்களின் ஆதரவையும் தார்மிக ஒருமைப்பாட்டையும் வேண்டி நிற்கிறார்கள்.

ஈழத்தமிழரை இஸ்ரேலியர்களுடன் அபத்தமாக ஒப்பிடுபவர்கள் இன்னமும் இருக்கிறார்கள். நமது ஒற்றுமைகள், இஸ்ரேலியர்களுடனா அல்லது பலஸ்தீனர்களுடனா என்பதை முதலில் முடிவு செய்வோம்.

## கடிதங்கள்

### ஆபத்தான வீதி; அக்கறை எடுக்கவும்

களுத்துறை நகரில் இருந்து, களுத்துறை பொலிஸ் பயிற்சி பாடசாலை, கமகொட, சேருபிட்ட ஆகிய பகுதிகளுக்குச் செல்லும் தூவபன்சல வீதியின் கெமுனு மாவத்தையின் கொடேவத்தை பகுதியில் அமைந்துள்ள சிறிய பாலத்தின் இரு புறங்களிலும், பாதுகாப்பு வேலிகள் இல்லாததன் காரணத்தால், விபத்துகள் ஏற்படக் கூடிய அபாயம் காணப்படுவதாக, பிரதேச வாசிகள் அச்சம் தெரிவிக்கின்றனர்.

களுத்துறை பிரதேச சபையின் நிர்வாகத்துக்கு உட்பட்ட இந்தப் பகுதியில் அமைந்துள்ள மேற்படி வீதியில், தினந்தோறும் பாடசாலை சேவை வாகனங்கள் உட்பட ஆயிரக்கணக்கானோர் பயணம்செய்து வருகின்றனர்.

அண்மையில், இந்த வீதி கார்பெட் செய்து, செப்பனிட்டு புனரமைப்புப் பணிகளை மேற்கொண்ட போதிலும், நீண்ட காலமாகவே கவனிப்பார் இன்றி, பாலத்தின் பாதுகாப்பு வேலி பழுதடைந்து காணப்படுகிறது.

எனவே, குறித்த வீதியில் பயணிக்கும் பொதுமக்களின் உயிர்ப்பாதுகாப்பு கருதி, மேற்படி பாலத்தில் இருபுறங்களிலும் தீர்க்கமான பாதுகாப்பு வேலிகளை அமைத்துத் தருமாறு, சம்பந்தப்பட்ட தரப்பிடம் கோரிக்கை முன்வைக்கப்படுகின்றது.

களுத்துறை என் ஜெயரட்னம்



புதுடெல்லி

கொவிஷீல்ட் தடுப்பூசி:

# இரண்டு 'டோஸ்'களுக்கான இடைவெளி 12-16 வாரமாக மாற்றம்



கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதல் டோஸுக்கும் இரண்டாம் டோஸுக்கும் தற்போது நடைமுறையில் உள்ள 4-8 வார இடைவெளியை 12-16 வாரமாக மாற்ற நிபுணர் குழு பரிந்துரைத்துள்ளது.

கோவாக்சின் தடுப்பு மருந்தின் இரண்டாவது 'டோஸ்' நான்கு வார காலத்துக்குப் பிறகு செலுத்தப்படுகிறது. அதேசமயம கொவிஷீல்ட் தடுப்பூசியின் முதல் டோஸுக்கும் இரண்டாம் டோஸுக்கும் இடைவெளி 4-6 வாரமாக முதலில் பின்பற்றப்பட்டது. பிறகு இந்த இடைவெளியை 4-8 வாரமாக மாற்றிய மத்திய சுகாதாரத்துறை, தற்போது 12-16 வாரங்களுக்குள் செலுத்துமாறு பரிந்துரைத்துள்ளது. கோவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டாவது டோஸ் 12-16 வாரங்களுக்குள் வழங்கப்பட்டால், அதன் நோய் எதிர்ப்பு சக்தி அதிகரிப்பதாக நிபுணர்குழு தெரிவித்துள்ளது.

கோவிஷீல்ட் தடுப்பூசியின் இரண்டு டோஸ்களுக்கான இடைவெளியை மாற்றி அமைக்குமாறு தடுப்பூசி குறித்த தேசிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழுவும், கோவிட்-19 தடுப்பூசி போடுவதற்கான தேசிய நிபுணர் குழுவும் பரிந்துரைத்தபடி இந்த மாற்றம் செய்யப்பட்டுள்ளது.

இந்த மாற்றம், கோவிஷீல்ட் தடுப்பூசிக்கு மட்டுமே பொருந்தும்; கோவாக்சின் தடுப்பூசிக்கு அல்ல. தேசிய தொழில்நுட்ப ஆலோசனைக் குழு, கொவிட்-19 தடுப்பூசி போடுவதற்கான தேசிய நிபுணர் குழு ஆகியவற்றின் இந்தப் பரிந்துரையை சுகாதார மற்றும் குடும்ப நல அமைச்சகம் பரிசீலித்து விரைவில் அறிவிப்பு வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.

நோய்த்தடுப்பைத் தொடர்ந்து பாதகமான நிகழ்வுகள் பற்றிய தேசிய குழு உறுப்பினர் என். கே. அரோரா இது குறித்துக் கூறுகையில், "இரண்டாவது தடுப்பூசி போட 8-10 வாரங்கள் இடைவெளி அதிகரித்தாலும், அதனால் கவலைப்பட வேண்டியதில்லை. அதுவரை முதல் 'டோஸ்' போட்டதன் மூலம் நோய் எதிர்ப்பு சக்தி உடலில் நீடித்திருக்கும். எனவே, இரண்டாவது 'டோஸ்' போட கால தாமதமானதால் மீண்டும் முதல் 'டோஸ்' போட்டுக் கொள்ள வேண்டிய அவசியமில்லை" என்றார்.

இந்திய விஞ்ஞான ஆய்வு நிலையத்தைச் சேர்ந்த டொக்டர் வினிதா போல் கூறுகையில், "முதல் 'டோஸ்' போட்டுக் கொண்டவர்களுக்கு நோய் எதிர்ப்பு சக்தி 4-5 மாதம் வரை நீடிக்கும். சர்வதேச ஆய்வுகளில் கூறப்பட்ட தகவலின்படி, கோவிஷீல்ட் தடுப்பூசி இரண்டாவது டோஸ் 12-16 வாரத்துக்குள் போட்டுக் கொள்ளலாம். எனவே, முதியவர்கள் அவசரம் காட்ட வேண்டாம். தடுப்பூசிக்காக கூட்டத்துக்குள் செல்ல வேண்டிய அவசியமில்லை" என்றார்.

லக்னோ

## கொரோனா பிணங்களை தோண்டி துணிகள் திருட்டு

கொரோனா நோயாளிகள் பெருமளவு இறப்பதையடுத்து, அவர்கள் ஆங்காங்கே புதைக்கப்படுகின்றார்கள். அவ்வாறு புதைக்கப்பட்ட பிணங்களைத் தோண்டி எடுத்து, துணிகளை திருடிய கும்பலைப் பொலிஸார் கைதுசெய்துள்ளனர்.

உத்தரபிரதேச மாநிலம், பகாபத்தில் பிணங்களைப் புதைத்ததும் இந்தக் கும்பலைச் சேர்ந்தவர்கள், அதைத் தோண்டி எடுத்து, உடலில் போர்த்தப்பட்ட புதுத் துணிகள், சேலைகள், ஆடைகளை எடுத்துச் சென்று, சுத்தம் செய்து, புதிய துணி போல மாற்றி, முக்கிய ஆடை நிறுவனத்தின் முத்திரைகளைப் பதித்து விற்பனை செய்து விடுவார்கள். இந்தக் கும்பலை சேர்ந்த ஏழு பேரைக் கைது செய்த பொலிஸார், அவர்களிடமிருந்து 520 போர்வைகள், 127 குர்தாக்கள், 52 சேலைகள் ஆகியவற்றைப் பறிமுதல் செய்தனர்.



சென்னை

## தடுப்பூசி இறக்குமதிக்கு தமிழகம் முடிவு

கொரோனா தடுப்பூசியை வெளிநாடுகளில் இருந்து இறக்குமதி செய்ய தமிழக அரசு முடிவு செய்துள்ளது.

18 வயதில் இருந்து 45 வயது வரை உள்ளவர்களுக்கு, மாநில அரசுகளே தடுப்பூசிகளை கொள்முதல் செய்து, பயன்படுத்த வேண்டும் என, மத்திய அரசு தெரிவித்துள்ளது. இதன்படி தமிழகத்துக்கு 13 இலட்சம் தடுப்பூசிகள் ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளன. இது, 18 வயது முதல், 45 வயது வரை உள்ளவர்களுக்கு செலுத்த போதுமானதாக இல்லை. எனவே, உலகளாவிய ஒப்பந்த புள்ளிகள் வழியே தடுப்பூசிகளை இறக்குமதி செய்து பயன்படுத்த, முடிவு செய்யப்பட்டது.

சென்னை

## உலகத் தமிழர்களே உயிர்காக்க நிதி வழங்குங்கள்

### முதலமைச்சர் ஸ்டாலின் கோரிக்கை

கொரோனா தடுப்பு பணிக்கு, வெளிநாடு வாழ் தமிழர்கள் நிதி வழங்க ஸ்டாலின் வேண்டுகோள் விடுத்துள்ளார். இதற்காக, கொரோனா நோய்த் தடுப்பு மற்றும் நிவாரண நிதியம் ஆரம்பிக்கப்பட்டுள்ளது. இதையடுத்து, அரசியல் கட்சிகள், சினிமா பிரபலங்கள், பொதுமக்கள் தங்களால் முடிந்த நிதியை நிதியத்துக்கு வழங்கி வருகின்றனர்.

நடிகர் சிவகுமார், அவரது மகன்களான நடிகர் சூர்யா, நடிகர் கார்த்திக் ஆகியோர், முதலமைச்சரைச் சந்தித்து, ஒரு கோடி ரூபாய் நிதி அளித்தனர். அதன்பின் சிவகுமார் கூறுகையில், "கொரோனா தொற்றில் இருந்து விடுபட, அனைவரும் அரசுக்கு ஒத்துழைக்க வேண்டும். நிவாரண நிதிக்கு, எங்களால் முடிந்த சிறு தொகையாக, 1 கோடி ரூபாயை, சூர்யா வழங்கி உள்ளார்" என்றார்.

விழுப்புரத்தைச் சேர்ந்த ஐந்தாம் வகுப்புப் படிக்கும் மாணவி சிந்துஜா, மடிக்கணினி வாங்க, உண்டியலில் சேமித்து வந்த பணத்தை, உண்டியலை உடைத்து அதில் இருந்த ரூ1,500 வங்கியில் வரைவோலையாக மாற்றி கொரோனா நிதியத்துக்கு அனுப்பி வைத்துள்ளார். மாணவியை பல்வேறு தரப்பினரும் பாராட்டி வருகின்றனர்.

இதேபோல், நாமக்கல், திருச்செங்கோட்டைச் சேர்ந்த அரசு பஸ் நடத்துநர் தனது ஒரு மாத சம்பளமாகிய ரூ 33 ஆயிரத்தை நிதியத்துக்கு அனுப்பியுள்ளார்.

சென்னை

## தமிழகத்தில் ஒருநாள் பாதிப்பு

### 30,000த்தை கடந்தது; 293 பேர் உயிரிழப்பு

தமிழகத்தில் நேற்றுமுன்தினம் கொரோனா தொற்றால், 30,355 பேர் பாதிக்கப்பட்டுள்ளதுடன் 293 பேர் உயிரிழந்துள்ளனர். மாநிலத்தில் உள்ள, 267 கொரோனா பரிசோதனை நிலையங்களில் நேற்றுமுன்தினம் மட்டும் 1 இலட்சத்து56 ஆயிரம் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதில், 30,355 பேருக்கு தொற்று கண்டறியப்பட்டுள்ளது. இதுவரை 2 கோடி 44 இலட்சம் மாதிரிகள் பரிசோதிக்கப்பட்டதில், 14 இலட்சத்து 68 ஆயிரத்து 864 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர். 16 ஆயிரத்து 471 பேர் இறந்துள்ளனர்.

இதேவேளை, இந்தியாவில் நேற்றுமுன்தினம் மட்டும் 4,120 பேர் உயிரிழந்துள்ளதுடன் புதிதாக 3,62,727 பேர் தொற்றுக்குள்ளாகி உள்ளனர். இதேவேளை, நேற்றுமுன்தினம் வரை 17,72,14,256 பேருக்கு கொரோனா தடுப்பூசி போடப்பட்டுள்ளது.

தூத்துக்குடி

## இலங்கைக்கு கடத்திய வெள்ளிக்கொலுசுகள் தூத்துக்குடியில் பறிமுதல்



கடந்த வெள்ளிக்கிழமை (07) தூத்துக்குடியில் இருந்து படகில் நான்கு பேர் வெங்காய விதை மூட்டைகளுக்குள் மறைத்து, வெள்ளிக்கொலுசுகளை இலங்கைக்குக் கடத்திச் சென்றனர். அவர்கள், தனுஷ்கோடியை கடந்து இலங்கை எல்லை பகுதியை சென்றடைந்தனர். அங்கு இலங்கையைச் சேர்ந்தவர்கள் பொருட்களை வாங்க வரவில்லை. இதனால் ஒரு நாள் முழுவதும் அவர்கள் அங்கு காத்திருந்தனர்.

அந்தச் சமயத்தில், இலங்கை கடற்படையினர் அங்கு ரோந்து வந்தனர். இதனால், படகில் வைத்திருந்த வெங்காய விதை மூட்டைகளை வெட்டி, கடலில் வீசிவிட்டு, 11 பக்கெட்டுகளில் இருந்த வெள்ளிக்கொலுசுகளை படகுக்குள் மறைத்து வைத்தனர்.

இலங்கை கடற்படை அருகில் வந்துபோது, வெங்காய விதைகளை கடலில் வீசி விட்டதாகத் தெரிவித்தனர். இதனால் அவர்களை எச்சரித்து கடற்படையினர் அனுப்பி வைத்தனர். இதையடுத்து, 11 பக்கெட்டுகள் கொலுசுகளுடன் அவர்கள் திரும்பவும் தூத்துக்குடியைச் சென்றடைந்தனர்.

இதுகுறித்து, கியூபிரிவு பொலிஸாருக்கு இரகசிய தகவல் கிடைத்தது. பொலிஸார் இலங்கை சென்று வந்த படகில் சோதனை நடத்தியபோது, 11 பக்கெட்டுகளில் 21 கிலோ எடை கொண்ட வெள்ளிக்கொலுசுகள் கைப்பற்றப்பட்டன. இதன் மதிப்பு இந்திய ரூபாய்களில் 20 இலட்சம் ஆகும்.

சமீபத்தில், தூத்துக்குடியில் இருந்து இலங்கைக்கு கஞ்சா கடத்தியவர்களை இலங்கை கடற்படையினர் கைது செய்த பின்னர், கஞ்சாவைக் பறிமுதல் செய்துகொண்டு, கொரோனா அச்சம் காரணமாக கடத்தல்காரர்களைத் திருப்பி அனுப்பியிருந்தமை குறிப்பிடத்தக்கது.

புதுடெல்லி

## கங்கையில் மிதந்த பிணங்களால் கொரோனா பரவாது

கொரோனாவால் இறந்தவர்களின் சடலங்கள் கங்கை ஆற்றில் மிதந்ததால், கொரோனா வைரஸ் பரவல் அதிகரிக்கும் என்ற கவலை தேவையில்லை' என, நிபுணர்கள் கூறியுள்ளனர்.

உத்தரப் பிரதேசம், பீஹார் ஆகிய மாநிலங்களில் உள்ள பல மாவட்டங்களுக்கு, கங்கை ஆற்றிலிருந்து தான், குடிநீர் வழங்கப்படுகிறது. கொரோனாவின் கடுமையான இரண்டாவது அலையால், இறந்தவர்களின் சடலங்கள் கங்கையில் வீசப்பட்டு, கொரோனா நோயாளிகளின் உடல்கள் மிதந்ததால், தண்ணீர் மூலம் வைரஸ் பரவும் என்ற அச்சம் ஏற்பட்டுள்ளது.

ஆனால், இதை நிபுணர்கள் மறுத்துள்ளனர். இது பற்றி, அவர்கள் கூறியதாவது: கங்கை, அதன் கிளை ஆறுகளில், பிணங்கள் மிதப்பது புதிதல்ல. ஆனாலும் கொரோனா பரவல் சமயத்தில், ஆற்றில் பிணங்கள் அதிகமாக மிதந்தது, சாதாரண விடயமல்ல. எனினும், இதனால் கொரோனா வைரஸ் பரவுவதற்கு வாய்ப்பில்லை. கங்கையில் பிணங்கள் மிதந்ததால், தண்ணீரில் மாசு ஏற்பட்டிருக்கலாம். ஆனால், அது பெரியளவில் இருக்காது என்று கூறியுள்ளனர்.



# ரமழான் வாழ்த்து செய்திகள்...

## ஜனாதிபதி வாழ்த்து



இலங்கை வாழ் முஸ்லிம் மக்கள் ரமழான் நோன்பு காலத்தை நிறைவுசெய்து, இறைவன் அல்லாஹ் தங்களின் விருப்பங்களை ஏற்றுக்கொள்வான் என்ற நம்பிக்கையுடன் ஈதுல்-பித்ர் நோன்புப் பெருநாள் பண்டிகையை கொண்டாடும் நன்னாளில் அவர்களின் அந்த அனைத்து நல்லெண்ணங்களும் ஈடேற வேண்டுமென ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ, தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

எந்தவிதமான அந்தஸ்து வேறுபாடுகளின்றி அனைவரும் ஒன்றாக ரமழான் மாதத்தில் ஒரு வளமான வாழ்க்கைக்காக அல்லாஹ்வின் அருளைப் பெற்றுக்கொள்வது ஒரு சமய மரபு என்ற போதிலும், அதன் சமூகப் பெறுமானம் போற்றத்தக்கதாகும்.

தமது வாழ்க்கையை பரிசுத்தப்படுத்தி, சுய கட்டுப்பாட்டை வளர்த்துக்கொள்வதற்குமான ஒரு சிறந்த சந்தர்ப்பமாக முஸ்லிம்கள் ரமழானை கருதுகின்றனர் எனவும் குறிப்பிட்டுள்ளார்.

## பிரதமர் வாழ்த்து



ரமழான் நோன்பு காலத்தை நிறைவுசெய்து ஈதுல் ஃபிதர் திருநாளை கொண்டாடும் இலங்கை வாழ் முஸ்லிம்கள் அனைவருக்கும் பிரதமர் மஹிந்த ராஜபக்ஷ தனது வாழ்த்துகளைத் தெரிவித்துள்ளார்.

நோன்பின் மூலம், முக்கியமான செய்தி வெளிப்படுத்தப்படுகிறது.

பிறரது பசி பற்றிய சரியான புரிந்துணர்வுடன், விட்டு கொடுப்பு மிகுந்த ஒரு சமூகத்தை கட்டியெழுப்ப இஸ்லாமியர்கள் ஒன்றிணைவார்கள் என்பது எனது நம்பிக்கையாகும்.

இஸ்லாமியர்கள் வரலாறு முழுவதும் இலங்கை சமூகத்தில் பிற இனங்கள் மற்றும் மதங்களுடன் ஒருவருக்கொருவர் மிகுந்த நட்புடன் செயற்பட்டுள்ளனர் என்றும் தெரிவித்துள்ளார்.

## ரிஷாத் எம்.பி வாழ்த்து



ஈகைத்திருநாளின் இறைஞ்சுதல்களில் முஸ்லிம் சமூகம், தலைவர்கள் மற்றும் அறிஞர்களது ஈடேற்றங்களுக்கும் கையேந்துவோம். புனித நோன்பாளிகளின் பிரார்த்தனைகளும், அநீதியிழைக்கப்பட்டோரின் ஆராதனைகளும் "அல்லாஹ்விடத்தில்" அதிசீக்கிரம் அங்கிகரிக்கப்படுகிறது என அகில இலங்கை மக்கள் காங்கிரஸின் தலைவரும் எம்.பியுமான ரிஷாத் பதியூதீன், தனது வாழ்த்துச் செய்தியில் தெரிவித்துள்ளார்.

இன்றைய நிலையில் எமது சமூகம் பாரிய அநீதிக்கு ஆளாகியுள்ளது. ரமழானின் பரிந்துரைகள் இறைவனிடம் ஒப்படைக்கப்படும் காலமிது. நாம் செய்த அமல்கள், தியாகங்களுக்கு நற்கூலிகளாக இறைவன் நாம் கேட்கும் ஹலாலான "ஹாஜத்துக்களை" அள்ளித் தரக் காத்திருக்கிறான். இந்த அருட்கடாட்சங்கள் சிறைகளிலும், விசாரணைகளிலும் தடுத்து வைக்கப்பட்டுள்ள அரசியல் தலைவர்கள், அறிஞர்கள், ஊடகவியலாளர்கள், அப்பாவிகளுக்கும் விடுதலை கிடைக்கப் பிரார்த்தியுங்கள் என்றும் தனது வாழ்த்துச் செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

## ரமேஸ்வரன் எம்.பி வாழ்த்து



இஸ்லாமியர்களின் திருநாள்களில் ஒன்றான ஈகைத் திருநாளை கொண்டாடும் இஸ்லாமிய மக்களுக்கு வாழ்த்துகளை தெரிவிக்கிறேன் என இலங்கை தொழிலாளர் காங்கிரஸின் நிதிச்செயலாளரும் நுவரெலியா மாவட்ட எம்.பியுமான மருதபாண்டி ரமேஸ்வரன் விடுத்துள்ள ஈகைப் திருநாள் வாழ்த்து செய்தியில் குறிப்பிட்டுள்ளார்.

ரம்ழான் மாதம் முழுவதும் நோன்பு நோற்கப்பட்டு நிறைவேறிய பின்பு இறுதித் திருநாளான ஈகைத்திருநாளில் முஸ்லிம் சகோதர, சகோதரிகள் அனைவரும் தமது திருநாளை மகிழ்வுடன் கொண்டாடுகின்றனர். கொவிட் 19 வைரஸிலிருந்து அனைத்து இன மக்களும் மிக விரைவில் விடுதலை பெறவேண்டும் என எல்லாம்வல்ல இறைவனிடம் பிரார்த்தனை செய்யுங்கள் என அந்த வாழ்த்துச் செய்தியின் ஊடாக கேட்டுக்கொண்டுள்ளார்.

## ஜம்இய்யத்துல் உலமா வாழ்த்து

கொவிட் 19 காரணமாக மிகவும் நெருக்கடியான சூழ்நிலையில் ஒரு மாத காலம் தொடராக நோன்பு நோற்று, நற்காரியங்களில் ஈடுபட்டு பெருநாளைக் கொண்டாடுகின்ற அனைத்து முஸ்லிம்களுக்கும் அகில இலங்கை ஜம்இய்யத்துல் உலமாவின் தலைவர், பொதுச் செயலாளர், பொருளாளர், நிறைவேற்றுக் குழு உறுப்பினர்கள், ஏனைய உறுப்பினர்கள் மற்றும் பணியாளர்கள் தமது ஈதுல் ஃபித்ர் பெருநாள் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்கின்றனர்.

இவ்வைரஸ் தொற்றிலிருந்து நம் தாய்நாட்டை மீட்டெடுப்பதற்காக உழைக்கும் சுகாதார சேவையில் ஈடுபடுகின்றவர்கள், பாதுகாப்பு அதிகாரிகள் மற்றும் அத்தியவசிய சேவைகளில் பணிபுரிபவர்கள் அனைவருக்கும் மனமார்ந்த நன்றிகளை தெரிவித்துக் கொள்கின்றது.

கொவிட் 19 காரணமாக இறந்தவர்களின் குடும்பத்தினருக்கு விமோசனமும் மனஅமைதியும் கிடைக்க வேண்டுமெனவும் அந்த வாழ்த்துச் செய்தியில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

பலஸ்தீனம்

றொக்கெட், விமானத் தாக்குதல்களுக்கு மத்தியில்

# காஸா எல்லையில் இஸ்ரேலியப் படைகள்

காஸா எல்லையில் இஸ்ரேலியப் படைகள் நேற்றுக் குவிந்துள்ளன.

இந்நிலையில், இஸ்ரேல் மீது பலஸ்தீன ஆயுததாரிகள் றொக்கெட் மழை பொழிந்துள்ளன.

தவிர, யூத இஸ்ரேலியர்களுக்கும், இஸ்ரேலின் அரேபிய சிறுபான்மை இனத்துக்கும் இடையிலான கடந்த சில நாள்கள் வன்முறையானது நேற்று முன்தினமிரவு மோசமடைந்துள்ளதுடன், வணக்கஸ்தலங்கள் தாக்கப்பட்டதுடன், சில சமூகங்களின் வீதிகளில் மோதல் வெடித்துள்ளது.



இந்நிலையில், காஸாவில் கடந்த திங்கட்கிழமை வன்முறை தீவிரமடைந்ததிலிருந்து குறைந்தது 83 பேர் கொல்லப்பட்டுள்ளதாக மருத்துவ அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இஸ்ரேலில் ஏழு பேர் கொல்லப்பட்டதாக, அந்நாட்டு இராணுவம் தெரிவித்துள்ளது.

இந்நிலையில், காஸா எல்லையூடு சண்டைப் படைகளை இஸ்ரேல் தயார்படுத்தியுள்ளதாகவும், தரை நடவடிக்கைகளைத் தயார்படுத்தும் பல கட்டங்களிலுள்ளதாக இஸ்ரேலிய இராணுவப் பேச்சாளரொருவர் தெரிவித்துள்ளார்.

இதேவேளை, நச்சு வாயுவை உள்ளெடுத்தமை காரணமாக நேற்று முன்தினமிரவு உயிரிழந்திருக்கலாமென காஸாவிலுள்ள சுகாதார அதிகாரிகள் தெரிவித்த சிலரின் உயிரிழப்புகள் குறித்து தாம் விசாரணை செய்வதாக அவர்கள் கூறியுள்ளனர்.



## ஆர்ப்பாட்டக்காரர்களுடன் மோதல்

இஸ்ரேலிய – பலஸ்தீன வன்முறையைத் தொடர்ந்தான ஆர்ப்பாட்டமொன்றில், பிரித்தானியத் தலைநகர் இலண்டனில், பலஸ்தீனத்துக்கு ஆதரவான ஆர்ப்பாட்டக்காரர்களை பொலிஸ் அதிகாரிகள் அழைத்துச் செல்கின்றனர்.

பிரான்ஸ்

சுவரொட்டியில் ஹிஜாப்

## முஸ்லிம் வேட்பாளருக்கு தடை




உள்ளூர்த் தேர்தலில் முஸ்லிம் வேட்பாளரொருவர் போட்டியிடுவதை, பிரெஞ்சு ஜனாதிபதி இமானுவேல் மக்ரோனின் ஆளும் ஜனநாயகக் கட்சி தடை செய்துள்ளது.

பிரசாரமொன்றில் ஹிஜாப்பொன்றுடன் குறித்த வேட்பாளர் புகைப்படமெடுக்கப்பட்ட நிலையிலேயே அவரை ஜனாதிபதி மக்ரோனின் கட்சி தடை செய்துள்ளது.

மதச்சார்பற்றதாகவே கட்சி இருக்கின்றது எனத் தெரிவித்த ஜனாதிபதி மக்ரோனின் கட்சி, மத அடையாளங்களை தேர்தல் ஆவணங்களில் வெளிப்படுத்த இடமில்லை எனக் கூறியுள்ளது.

ஈரான்

ஜனாதிபதித் தேர்தலில்

## அஹ்மட்நிஜாட் களத்தில்

ஈரானின் அடுத்த ஜனாதிபதியாவதற்காக, அந்நாட்டின் முன்னாள் ஜனாதிபதி மஹ்மூட் அஹ்மட்நிஜாட் மீண்டுமொரு தடவை பதிவு செய்துள்ளார்.



கடும்போக்குவாதியான அஹ்மட்நிஜாட், கடந்த 2005ஆம் ஆண்டு தொடக்கம் 2013ஆம் ஆண்டு வரையில் ஜனாதிபதியாகயிருந்ததுடன், கடந்த 2017ஆம் ஆண்டு மீண்டும் போட்டியிட முயன்று காப்பாளர் சபையால் நிராகரிக்கப்பட்டிருந்தார்.

இந்நிலையில், அஹ்மட்நிஜாட் மீண்டும் நிராகரிக்கப்படுவாரென்றே எதிர்பார்க்கப்படுகிறது.

நேற்று முன்தினம் தனது ஆதரவாளர்களுடன் சென்று அஹ்மட்நிஜாட் பதிவை மேற்கொண்டிருந்தார்.

ஆப்கானிஸ்தான்

காபூல் புறநகரை

## கைப்பற்ற போரிடும் ஆப்கான் படைகள்

ஆப்கானிஸ்தான் தலைநகர் காபூலுக்கு வெளியேயுள்ள தலிபானின் கட்டுப்பாட்டிலுள்ள மாவட்டமொன்றை மீளக் கைப்பற்றுவதற்கான நடவடிக்கையொன்றை ஆப்கானிஸ்தானின் பாதுகாப்பு படைகள் ஆரம்பித்துள்ளதாக உள்ளூர் அதிகாரியொருவர் தெரிவித்துள்ளார்.

சில அரசாங்கப் படைவீரர்களை தலிபான் போராளிகள் கடந்த செவ்வாய்க்கிழமை கொன்றது அல்லது கைப்பற்றியதுடன், ஏனையவர்களை நெர்க்கிலிருந்து பின்வாங்க வைத்திருந்தனர்.





பிரித்தானியா

## கொவிட்-19 தடுப்பு மருந்துகளை கலப்பதால் பக்க விளைவுகள்

அஸ்ரனெக்கா, பைஸர் கொவிட்-19 தடுப்பு மருந்துகளை கலப்பதன் மூலம் வயது வந்தவர்கள், மென்மையானதுக்கும் கடுமையானதுக்கும் இடையிலான பக்க விளைவுகளை வெளிப்படுத்துவரென ஆராய்ச்சி இனங்காட்டியுள்ளது.

காய்ச்சல், தலையிடி, தசை நோவு என்பன வெவ்வேறான கொவிட்-19 தடுப்புமருந்துகளைச் சேர்க்கும்போது ஏற்படுவதாக அடிக்கடி அறிக்கையிடப்பட்டுள்ளது. எனினும் எதுவும் குறுகிய நேரமே இருப்பதுடன், வேறெந்த பாதுகாப்பு பிரச்சினைகளும் இல்லை என்பது குறிப்பிடத்தக்கது.

வித்தியாசமான கொவிட்-19 தடுப்பு மருந்தை இரண்டாவது தடவை செலுத்தும்போது நீண்ட கால நோயெதிர்ப்பை வழங்குமா, புதிய மாறிகளுக்கெதிராக மேம்பட்ட பாதுகாப்பை வழங்குமா என ஆராய்வதற்காக குறித்த ஆராய்ச்சி மேற்கொள்ளப்பட்டிருந்தது.



டெஸ்ட் தரவரிசையில்

# முதலாமிடத்தில் இந்தியா

வருடாந்த இற்றைப்படுத்தலையடுத்து, சர்வதேச கிரிக்கெட் சபையின் டெஸ்ட் போட்டிகளுக்கான, அணிகளின் தரவரிசையில் முதலாமிடத்தில் இந்தியாவும், இரண்டாமிடத்தில் நியூசிலாந்தும் காணப்படுகின்றது.

இந்நிலையில், நான்காமிடத்திலிருந்து மூன்றாமிடத்துக்கு இங்கிலாந்து முன்னேறியுள்ளதுடன், எட்டாமிடத்திலிருந்து ஆறாமிடத்துக்கு மேற்கிந்தியத் தீவுகள் முன்னேறியுள்ளது.

அவுஸ்திரேலியாவுடனான 2017-18ஆம் ஆண்டு 0-4 தோல்வியானது தரவரிசைப் புள்ளிகளிலிருந்து விடுபட்டதையடுத்தே மூன்றாமிடத்துக்கு இங்கிலாந்து முன்னேறியுள்ளது.

தற்போது, கடந்தாண்டு மே மாதத்திலிருந்தான போட்டிகளின் முடிவுகள் 100 சதவீதம் தரப்படுத்தப்படுவதுடன், முன்னைய இரண்டு ஆண்டுகளின் முடிவுகள் 50 சதவீதமே தரப்படுத்தப்படுவது குறிப்பிடத்தக்கது.

பங்களாதேஷுக்கெதிரான தொடரை 2-0 என வென்றதுடன், இலங்கையுடனான தொடரை 0-0 எனச் சமப்படுத்திய நிலையிலேயே ஆறாமிடத்துக்கு மேற்கிந்தியத் தீவுகள் முன்னேறியுள்ளது.

முதல் 10 அணிகளின் தரவரிசை பின்வருமாறு,

1. இந்தியா, 2. நியூசிலாந்து, 3. இங்கிலாந்து, 4. அவுஸ்திரேலியா, 5. பாகிஸ்தான், 6. மேற்கிந்தியத் தீவுகள், 7. தென்னாபிரிக்கா, 8. இலங்கை, 9. பங்களாதேஷ், 10. சிம்பாப்வே.

## ஜூலையில் எல்.பி.எல் 2.0



இலங்கையின் உள்ளூர் இருபதுக்கு - 20 தொடரான லங்கா பிறீமியர் லீக் (எல்.பி.எல்) தொடரானது இவ்வாண்டு ஜூலை மாதம் 30ஆம் திகதி முதல் ஓகஸ்ட் மாதம் 22ஆம் திகதி வரை நடைபெறவுள்ளதாக இலங்கை கிரிக்கெட் சபை அறிவித்துள்ளது.

இவ்வாண்டு தொடரை நடத்துவதற்குரிய பொருத்தமான காலப் பகுதியொன்றைத் தாங்கள் கண்டுபிடித்துள்ளதாகவும், தொடரின் ஏனைய விவரங்களை இறுதி செய்வதில் தற்போது பணியாற்றுவதாகவும் இலங்கை கிரிக்கெட் சபையின் முகாமைத்துவ சபையின் தலைவர் கலாநிதி அர்ஜுன டி சில்வா தெரிவித்துள்ளார்.

இந்நிலையில், தொடருகு அண்மையாக தொடர் குறித்து இறுதி முடிவொன்றை எடுப்பதற்கு முன்பாக நாட்டின் நிலைமையை இலங்கை கிரிக்கெட் சபை ஆராயவுள்ளதாகவும், நாட்டிலுள்ள சுகாதார நிலைமை குறித்து கருத்து கேட்க சுகாதாரமைச்சுடன் கலந்துரையாடுமெனக் கூறப்பட்டுள்ளது.

இத்தாலிய சீரி ஏ தொடர்:

## றோமாவை வீழ்த்திய இன்டர் மிலன்

இத்தாலியக் கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான சீரி ஏ தொடரில், சம்பியனான இன்டர் மிலனின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணிக்கும், றோமாவுக்குமிடையிலான போட்டியில், 3-1 என்ற கோல் கணக்கில் இன்டர் மிலன் வென்றது.



இன்டர் மிலன் சார்பாக, மார்செலோ பிறோஸோவிச், மத்தியாஸ் வெசினோ, றொமெலு லுக்காக்கு ஆகியோர் தலா ஒவ்வொரு கோலைப் பெற்றனர். றோமா சார்பாகப் பெறப்பட்ட கோலை ஹென்றிச் மிகித்திரயான் பெற்றிருந்தார்.

அந்தவகையில், சீரி ஏ புள்ளிகள் பட்டியலில், ஏற்கெனவே சம்பியனான இன்டர் மிலன் 88 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் காணப்படுகின்றது. 75 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் அத்லாண்டாவும், அதே புள்ளிகளுடன் கோலெண்ணிக்கை வித்தியாசம் காரணமாக மூன்றாமிடத்தில் ஏ.சி மிலனும், 73 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் நாப்போலியும் காணப்படுகின்றது.



இங்கிலாந்து பிறீமியர் லீக்:

## செல்சியை வென்ற ஆர்சனல்

இங்கிலாந்து கால்பந்தாட்டக் கழகங்களுக்கிடையிலான பிறீமியர் லீக் தொடரில், செல்சியின் மைதானத்தில் நேற்று அதிகாலை நடைபெற்ற அவ்வணியுடனான போட்டியில், 1-0 என்ற கோல் கணக்கில் ஆர்சனல் வென்றது.

ஆர்சனல் சார்பாகப் பெறப்பட்ட கோலை எமிலே ஸ்மித் றொவே பெற்றிருந்தார்.

அந்தவகையில், இப்போட்டி முடிவில், பிறீமியர் லீக் புள்ளிகள் பட்டியலில், சம்பியனான மன்செஸ்டர் சிற்றி 80 புள்ளிகளுடன் முதலாமிடத்தில் காணப்படுகின்றது. 70 புள்ளிகளுடன் இரண்டாமிடத்தில் மன்செஸ்டர் யுனைட்டெட்டும், 66 புள்ளிகளுடன் மூன்றாமிடத்தில் லெய்செஸ்டர் சிற்றியும், 64 புள்ளிகளுடன் நான்காமிடத்தில் செல்சியும் காணப்படுகின்றது. இதில், லெய்செஸ்டரும், சிற்றியும் ஒரு போட்டியில் கூட விளையாடியுள்ளமை குறிப்பிடத்தக்கது.

விஜய நியூஸ்பேப்பர்ஸ் லிமிட்டெட்டினால் வெள்ளிக்கிழமை, 14 மே 2021, இல. 8, ஹுணுபிட்டிய குறுக்கு வீதி, கொழும்பு 02 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.